


திண்டுக்கல் மாவட்ட திருக்கோயில்கள் வழிகாட்டி

திருக்கோயில்கள் வழிகாட்டி

திண்டுக்கல் மாவட்டம்



தமிழ்நாடு அரசு

இந்து சமய அறநிலையத்துறை

திண்டுக்கல் மாவட்ட திருக்கோயில்கள் வழிகாட்டி

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

விலை : ரூ. 60/-

முதற்பதிப்பு : 2014

அச்சிட்டோர் : திண்டுக்கல் மாவட்ட அச்சக சேவைத் தொழிற்கூட்டுறவு சங்கம், திண்டுக்கல்.
94420 17275

முன் அட்டை : அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி மூலவர் இராஜ அலங்காரம்.

பின் அட்டை : பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் எழில்மிகு தோற்றம்.

திருக்கோயில்கள் வழிகாட்டி - திண்டுக்கல் மாவட்டம்

அமைதி – வளர்ச்சி – வளமை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்

திருக்கோயில்கள் வழிகாட்டி - திண்டுக்கல் மாவட்டம்

பூ.செந்தூர் பாண்டியன்
இந்து சமய மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 10.02.2014

வாழ்த்துச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர். புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் சாதனைகளின் வைரக்கல்லில் ஒன்றாக, வண்ணமும் எண்ணமும் இணைந்து எழில் சேர்க்கும் விதமாக இவ்வழிகாட்டி புத்தகம் அமைந்துள்ளது.

கல்லைக் கலையாக்கி, கலையை நிலையாக்கி, கோவில் சமைத்து கேட்டவர்களுக்கு கேட்ட வரங்களை தரும் தெய்வங்கள் குடிகொண்டிருக்கும் திருக்கோயில்களுக்கு பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும், நேர்த்தியான முறையில் சென்று சிறப்புடனே வழிபடுவதற்காக ஒரு கையேடாக இப்புத்தகம் அமைந்துள்ளது.

பயணப்படுவதும், இறைவனை வழிபடுவதும், வாழ்வில் உயர, உயர செல்வதும் இன்று மனிதனின் இன்றியமையாத தேவையாக உள்ளது.

இயற்கை சூழ்ந்த **திண்டுக்கல் மாவட்ட பக்தர்களுக்கும்** பயணிகளுக்கும் இந்நூல் ஒரு கருத்துக் கருவூலம் என்றால் அது மிகையாகாது.

இப்புத்தகத்தை நேர்த்தியோடு தயாரித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை நெகிழ்வோடு பதிவு செய்கிறேன்.

நன்றி

(பூ.செந்தூர் பாண்டியன்)

முனைவர். ரா.கண்ணன்
அரசு கூடுதல்
தலைமைச் செயலாளர்

சுற்றுலா பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை,
தலைமைச் செயலகம்
சென்னை - 9.
தொலைபேசி : 044-25670820

வாழ்த்துரை

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களைப் பற்றிய வரலாறுகளை மாவட்ட வரிசையாக எழுதி வெளியிடுவது காலத்தின் தேவையாகவுள்ளது. இதனை ஆன்மீக அன்பர்கள் பெரிதும் எதிர்நோக்கியுள்ளனர். தமிழக நாகரீகம் திருக்கோயில் நாகரீகமே.

"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

திருக்கோவிலில்லாத திருவிலூர்"

.... "ஊரல்ல அடவி காடே".

என்னும் கருத்தாழம் தமிழக மக்களிடையே எழுந்து உள்ளது. வாழ்க்கைச் சூழல் மற்றும் கால வளர்ச்சியில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளத் துணியும் போது ஏற்படும் மனச்சலனங்களை ஆன்மீகத் தேடல்கள் அதிகரித்துள்ளன. பாடல் பெற்ற தலங்கள், பரிகாரத் தலங்கள், மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்கள், இராசித் தலங்கள் என மக்கள் தங்களின் தேவைகளுக்கேற்ற திருத்தலங்களை நோக்கி பயணிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஒரு கோவிலைப் பார்க்கும் போது அதில் உள்ள கல் சிற்பங்கள், மரச்சிற்பங்கள் மற்றும் பண்டை ஓவியங்கள் (murals) அக்கோயிலின் தல வரலாற்றை எடுத்துரைக்க அங்கே எவரும் இலர். பல கோயில்களில் இராமாயணம், மகாபாரதம், திருவிளையாடல் புராணம் போன்ற காப்பியங்களில் வரும் புராண வரலாற்றுக் காலத்தில் இறைவன் நடத்திய திருவிளையாடல்கள் காட்சிப்படுத்துவதன் மூலம் எடுத்துரைக்கப்படுகின்றன. உதாரணமாகத் திருப்புடைமருதூர் இராஜகோபுர ஓவியங்கள், திருக்குற்றால சித்ரசபை ஓவியங்கள் போன்றவை. ஆதலால் அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் இவ்வழிகாட்டி நூல், செல்லும் கோயில்களைப் பற்றி அறிவதற்கு இன்றியமையாததாக இருக்கிறது.

மேலும், வெளிநாட்டு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக இந்து மதத்தின் மீதும் பண்டைய கலாச்சாரத்தை அறியவும், தங்கள் பயணத் திட்டங்களை வகுக்கவும் இவ்வழிகாட்டி நூல் நல்ல உறுதுணையாக அமையும்.

மாவட்டந்தோறும் இவ்வழிகாட்டி நூல்கள் இந்து சமய அறநிலையத் துறையினரால் வெளியிட்டமைக்கு என் மனமார்ந்த நன்றி. எல்லா மாவட்டங்களையும் அடக்கிய மாநில அளவிலான ஒரு வழிகாட்டி நூலையும் மாவட்ட நூல்களை சுருக்கி வெளியிட வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொணடு வாழ்த்துகிறேன்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது அவ்வைப் பிராட்டியாரின் நல்லுரையாகும். அறம் காத்த பண்டைத் தமிழ் மன்னர்கள் அறச்சின்னங்களாக ஆலயங்களை எழுப்பி தத்தம் இயல்பிற்கேற்றவாறு பொன்னும் பொருளும் வழங்கி அவைகளைப் பண்புக் களஞ்சியங்களாக உருவாக்கி வைத்துள்ளனர். அண்டை நாட்டார் வந்து வியந்து போற்றும் கவின்கலைச்சிற்பங்களையும், ஓவியக் கலைகளையும் ஒவ்வொருவரும் கண்டு பேருவகை கொள்ள வேண்டிய ஒன்றாகும். திருக்கோவிலின் தொன்மை கருதி மாவட்டந்தோறும் உள்ள திருக்கோயில்களுக்குச் சென்று கண்ணாறக் கண்டு நெக்குருக நின்று நினைந்தேத்தி வழிபட ஏதுவாக மாவட்டக்கையேடு தலவரலாற்றோடு வெளியிடுவது பக்தர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

இக்கையேடு வெளியிடுவதற்கு தலவரலாறு முதல் அப்பகுதி திருக்கோயில்களின் தனிச்சிறப்புகள் வரை கொடுத்துதவி மாவட்டந்தோறும் இந்நூல் வெளியிட உறுதுணை புரிந்த அத்துணை அன்பர்களுக்கும் வாழ்த்துக்கள்.

நன்றி!

ரா கண்ணன்

(முனைவர். ரா. கண்ணன்)

ப.தனபால், எம்.ஏ.பி.எல்.,
ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை

119, உத்தமர் காந்தி சாலை
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
அலுவலகம் : 044 -2833 4815
நிகரி : 044 2833 4816
மின்னஞ்சல் : tn.endowments@gmail.com

வாழ்த்துரை

"கால்களால் பயன்என் கறைக்கண்டன் உறை கோயில்
கோலக்கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயன்என்"

என்னும் நாவுக்கரசரின் நன்மொழிக்கேற்ப ஆயிரம் நாமம் உரைப்பினும் அணுப்பொழுதாவது அவன் அருளாலே அவன் தலம் நின்று அவன் தாள் வணங்கி மகிழ்வதற்கு ஈடில்லை என்பார்கள். இப்பேரின்பத்தை எந்நாளும் அனுபூதியடையக் கிடைத்த வாய்ப்பு வாழ்நாளில் கிடைத்த பிறவிப் பயனாகும்.

சமயத்தின் மூலம் உயர் பண்பினையும் ஒழுக்கத்தையும், நம்பிக்கையையும், இடர்பாடுகளைச் சமாளிக்கும் மனப்பான்மையையும் ஏற்படுத்துதல் முடியும். உண்மை, தூய்மை, அன்பு, நோமை, அயராத நம்பிக்கை போன்ற உயர் பண்புகளை மக்களிடையே ஏற்படுத்தி மனித ஆளுமை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவது திருக்கோயில்கள் சார்ந்த பண்பாட்டு அசைவுகளே ஆகும். அதனால்தான் அரசன் முதல் சாமானியன் வரை அவரவர் அரண்மனைகளையும் இல்லங்களையும் காப்பாதை விட ஆலயங்களைக் காத்து வந்தனர். ஆலயங்களைக் காத்துவரும் அரசர்கள் வரிசையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காத்துவரும் தமிழக திருக்கோயில்கள் காலத்திற்கும் நிலைபெறுபவைகளாக உள்ளன. அந்த வகையில் ஒவ்வொரு தலமும் ஒரு சிறப்புப் பெற்றவை. தலங்கள்தோறும் தரிசிப்பதால் முன்னோர்கள் தடம் பதித்த மண்ணில் நாமும் சென்று நிற்கும் புண்ணியம் அடைந்தவர்களாகிறோம்.

நல்லறம் செய்து நற்கதி எய்திடச் சென்றிடுவீர்! சிறப்புப் பெற்ற திருக்கோயில்களுக்கு பக்தி நெறியின்றி சென்று பரகதிவேட்கையராகிப் பாவம் நீங்கிச் சித்திபெற முயல்வார்க்கு இந்நூல் பெரிதும் ஆற்றுப்படுத்துதவும்.

இவ்வழிகாட்டி நூல் வெளிவர உதவிய நல் உள்ளங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து அனைவரும் இறைவன் திருவருளால் எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

நன்றி

(ப.தனபால்)

திரு.நா.நடராசன் எம்.எஸ்.சி.,பி.எல்.,
இணை ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை
மதுரை

திண்டுக்கல்
15.10.2014

முகவுரை

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக - மனுவைப்
படைத்தான் தனை வணங்க"

என்பது மனுநீதி

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா - என்றார் முண்டாசுக் கவிஞர்.

இறைவனின் இனிய நோக்கம் நிறைவேறவும், அவன் படைத்தருளிய இன்பங்களை அனுபவிக்கவும், இறைத் திருத்தலங்களை நாடிச் செல்வது நம் இயற்கைதானே!.

தாழ்த்தச் சென்னியும், வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், கரங்குவித்து வரம்பெற வாய்ப்பாய் அமைந்த இந்த முயற்சி பாராட்டத் தக்கதேயாம்.

"கோயிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்ற தமிழ் மூதாட்டியின் உரைக்கேற்ப. ஊர் தோறும் கோயில் கொண்டு, உலகம் தாமுளவாக்கி நிலைபெறச் செய்து, நீக்கவும் செய்து, அலகிலா விளையாட்டுடைய ஆண்டவனின் அடிபணிந்து, அருள் தேடச்செல்லும் மெய்யன்பர்களுக்கு இது ஒரு மெய்யான வழிகாட்டியாக அமையும் என்பது பொய்யல்ல.

"அவனின்றி ஓரணுவும் அசையாது" என்ற அசையாத நம்பிக்கையில், அமைக்கப்பட்ட, திண்டுக்கல் மாவட்டத் திருக்கோயில்களின் அமைவிடம், ஆராதனை நேரம், ஆண்டவன் அருட்சிறப்பு, செல்லும் வழி, தங்குமிடம் போன்றவற்றை தகுந்த முறையில் எடுத்துச் சொல்லும் சீர்மிகு பணியினைச் செம்மையுறச் செய்த இந்து சமய அறநிலையத் துறை சார்ந்தோர்க்கு இதயம் நிறைந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

(நா.நடராசன்)

திண்டுக்கல் மாவட்டத் திருக்கோயில்களின் வழிகாட்டி

முகவுரை

திண்டுக்கல் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம் ஆகும். இங்குள்ள மலை மற்றும் கற்படுகைகளால், இந்நகருக்கு திண்டுக்கல் எனப்பெயர் வரப்பெற்றது. 1985 செப்டம்பர் 15-ல் திண்டுக்கல் மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டது. இதன் கிழக்கே திருச்சி, புதுக்கோட்டை, மேற்கே கோயமுத்தூர், வடக்கே ஈரோடு, கரூர், தெற்கே மதுரை ஆகிய மாவட்டங்களை எல்லைகளாகக் கொண்டது 5,952 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும், சுமார் 17.75 லட்சம் மக்கள் தொகையையும் கொண்டு விளங்குகிறது.

வெளிநாட்டில் இருந்து இந்தியாவிற்கு சுற்றுலா வரும் பயணிகளுக்கும், நம் நாட்டில் உள்ள பக்தர்களுக்கும், தமிழ்நாட்டில் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்கள் முக்கிய வழிபாட்டுத் தலங்களாக விளங்கி வருகின்றன. பழநி, கொடைக்கானல், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், நிலக்கோட்டை, நத்தம், திண்டுக்கல் ஆகிய ஏழு வட்டங்களை உள்ளடக்கிய திண்டுக்கல் மாவட்டத்தில் 41 திருக்கோயில்களுக்கு மேற்படி திருக்கோயில்களைப் பற்றி நுணுக்கமான செய்திகள், அவற்றை சென்றடையும் வழி, வாகன வசதி, வரைபடக்குறிப்பு, பூஜை நேரங்கள், உற்சவ நாட்கள், அழகிய படங்கள் போன்ற எண்ணற்ற விவரங்களைத் தொகுத்து திண்டுக்கல் மாவட்டத் திருக்கோயில்களின் வழிகாட்டியாக கையேடாக இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை மூலமாக வெளியிடப்படுகிறது. இக்கையேடு திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளுக்கும் பக்தர்களுக்கும் ஒரு பயனுள்ள பயணியர் கையேடாகத் திகழும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் தமிழக முதலமைச்சர்

டாக்டர். **ஜெ.ஜெயலலிதா** அவர்களின்

அன்னதானத் திட்டம் கீழ்க்கண்ட திருக்கோயில்களில் நடைபெறுகிறது.

மதுரை இணை ஆணையரின் மண்டலத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் அன்னதான திட்டம் நடைபெறும் கோயில்களின் விபரம்

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில், பழனி
(மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நல்லாசியுடன் இக்கோயிலின் மலைக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் காலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை அறுசுவை உணவு உண்ணும் வகையில் முதன்முதலாக நாள முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் 13.09.2012 முதல் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.)
2. அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயில், பழனி.
3. அருள்மிகு குழந்தை வேலப்பர் கோயில், ஒட்டன்சத்திரம்.
4. அருள்மிகு காமாட்சியம்மன் கோயில், ஒட்டன்சத்திரம்.
5. அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர் கோயில், கொடைக்கானல்.
6. அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோவில், திண்டுக்கல்.
7. அருள்மிகு காளகஸ்தீஸ்வரர் திருக்கோயில், திண்டுக்கல்.
8. அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்.
9. அருள்மிகு கோபிநாதசுவாமி கோயில், ரெட்டியார்சத்திரம்
10. அருள்மிகு சௌந்திரராஜப் பெருமாள் கோயில்,தாடிக்கொம்பு
11. அருள்மிகு சித்தி விநாயகர் கோயில், ரயிலடி, திண்டுக்கல்.
12. அருள்மிகு காளியம்மன் கோயில், வத்தலக்குண்டு.
13. அருள்மிகு மாரியம்மன் கோயில், நத்தம்.
14. அருள்மிகு இடும்பன் கோயில், சிவகிரிப்பட்டி.
15. அருள்மிகு மாரியம்மன் கோயில், கொடைக்கானல்.
16. அருள்மிகு மாரியம்மன் கோயில், வேடசந்தூர்.
17. அருள்மிகு சௌந்திரராஜப் பெருமாள் கோயில், வடமதுரை.

- ❖ அன்னதான திட்டம் நாள் 1க்கு 100 நபர்களுக்கு உணவு வழங்குவதற்கு ரூ. 2000/- ஆகும்.
- ❖ நாள் 1க்கு 50 நபர்களுக்கு உணவு வழங்குவதற்கு ரூ. 1000/-ம் ஆகும். அன்னதான திட்டம் நன்கொடை வைப்பு நிதித் தொகை ரூ. 25,000/- செலுத்தினால் பக்தர்கள் விரும்பும் நாளில் ஆண்டுதோறும் ஒரு நாள் அன்னதானம் வழங்கப்படும்.
- ❖ அன்னதான நன்கொடை செலுத்துபவர்கள் வருமானவரி சட்டம் 80(G) கீழ் வருமான வரி விலக்கு பெறலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பக்தர்கள் கவனத்திற்கு

இப்பிரிவில் உள்ள திருக்கோயில்கள் பொதுவாக காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மீண்டும் மாலை 4.00 மணி முதல் சுமார் 8.30 மணி வரையிலும் மட்டுமே திறந்திருக்கும். இந்த நிர்ணயத்தைக் கருத்திற்கொண்டு அவரவர் உணவு இடைவேளைக்கும் ஓய்வு எடுத்தலுக்கும் சற்று அதிகதொலைவு பிரயாணம் மேற்கொள்ளவும், திரும்பவும், கணக்கிட்டுக் கொள்ளுதல் நலம். நகரங்களைத் தவிர்த்து தொலை தூரத்தில் உள்ள திருக்கோயில்களையும் தரிசித்து வர வசதியாக அனைவரும் எடுத்துச் செல்லத்தக்க எளிய சித்திரான்னங்கள் சிற்றுண்டிகளை கையிற்கொண்டு செல்லுதல் சிறந்தது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையால் சிறப்பு ஆன்மீக வகுப்புகள், அர்ச்சகர்கள், ஓதுவார்கள் புத்தொளிப்பயிற்சி, இலவசத் திருமணம், சமயச் சான்றோர் விழாக்களில் கருத்தரங்கு, சமயச் சொற்பொழிவு போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நன்கறிந்து பயன்பெறுக.

திருக்கோயில் என்னும் மாத இதழ் அறநிலையத் துறையினால் பிரதி ஒன்று ரூ-15க்கு வெளியிடப்படுகிறது. ஆண்டுச் சந்தா மற்றும் ஆயுள் சந்தாவாகவும் கிடைக்கப் பெறுகின்றது. மேலும், இதழ் பெற அணுக வேண்டிய முகவரி, ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, உத்தமர் காந்தி சாலை சென்னை-34.

பெரும்பாலும், திருக்கோயிலின் செயல் அலுவலர் எனும் அரசு அலுவலரின் பொறுப்பில் திருக்கோயில்கள் அறங்காவலர்களின் உறுதுணையோடு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. பணமோ பொருளோ அணிகளோ செலுத்தவும், இரசீது பெறவும் செயல் அலுவலரை மட்டுமே அணுகவும். பிற எந்தவொரு நபரும் சிப்பந்திகள் உட்பட திருக்கோவில் சார்பில் எவற்றையும் பெறத்தக்கவர் அல்லர்.

இத்திருக்கோயில்களில் திருமணங்கள் நிகழ்த்த வேண்டுமெனில் இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும் சட்டப்படி வயதும், பிற தகுதிகளும் உடையவராகவும் இருக்க வேண்டும். திருக்கோயில் சார்பில் கேட்கும் சான்றிதழ்களை முறையாகவும் முன்னதாகவும் கொடுத்தல் அவசியம். எனவே, முன்னதாகக் கோயில் அலுவலகத்தில் விண்ணப்பம், பிற தகவல்கள் பெறவேண்டியது அவசியம். தொலைபேசியைப் பயன்படுத்துதலும் நலம்.


திருக்கோயில் வளாகத்தில் தூய்மை காக்க வேண்டியது, நம் முதற்படி. நாம் அசுத்தம் செய்யாதிருப்பதும், அப்படிச் செய்பவரைத் தடுப்பதும் நலம். தவறான இடங்களில் விளக்கேற்றியும், திருக்கோயில்களில் கற்பூரத்தை ஆங்காங்கு ஏற்றியும், விபூதி, குங்கும பிரசாதங்களை தூண்களிலும், சுற்றுப்புறங்களிலும் கொட்டியும் தூய்மைக்கு கேடு வாராவண்ணம் குறிப்பாக, உரிய இடங்களில் உணவருந்தி, உணவருந்திய இடத்தைத் தாமே சுத்தம் செய்வதும் ஒரு திருப்பணியே ஆகும்.

திருக்கோயில்களுக்கு குத்தகை பாக்கிகளைச் செலுத்தாத உங்களின் நண்பர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள் இருந்தால் அவர்களை உடனே குத்தகைத் தொகையினை பாக்கியின்றிச் செலுத்திடச் செய்யுங்கள். அதுவே சிறந்த காணிக்கை ஆகும்.

பொருளடக்கம்

பொருளடக்கம்

பொருளடக்கம்





அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில்
பழநி, திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் – திண்டுக்கல்லில்லிருந்து கோயமுத்தூர் செல்லும் பேருந்து மற்றும் புகைவண்டி மார்க்கத்தில் சுமார் 55 கி.மீ தொலைவில் உள்ளது. கோயமுத்தூரிலிருந்து சுமார் 110 கி.மீ தொலைவிலும், மதுரையிலிருந்து சுமார் 120 கி.மீ தொலைவிலும் உள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

தலபுராணம் – நாரதர் கொண்டு வந்த ஞானப்பழத்தை அம்மையப்பர் தனக்கு வழங்காத காரணத்தால் அம்மையப்பரிடம் கோபித்துக் கொண்டு பழநி மலையில் முருகப்பெருமான் அடியவர்களின்வி னைை பாடிபடுதலுக்காகை கயில்ே காலூன்றி கோவனத்துடன் அனைத்தையும் துறந்து ஞானதண்டாயுதபாணியாகக் காட்சி தருவதாகப் புராணம் கூறுகிறது.







தலவரலாறு – கடைச்சங்க காலத்தில் இந்நகர் பொதினி என்று அழைக்கப்பட்டது. ஆதாரம் அகநானூறு பாடல்களில் காணப்படுகிறது. பொதினி என்ற பெயரே நாளடைவில் பழநி என்று மாறியது. திரு ஆவினன்குடி ஆலயம் பழநி மலை அடிவாரத்தில் வையாபுரி ஏரிக்கரையில் உள்ளது. இத்தலம் தமிழ் மூவேந்தர்களாலும், 12,13 மற்றும் 14ஆம் நூற்றாண்டுகளில் கொங்குச் சேரர்களாலும், விஜயநகர ஆட்சியின் கீழ் மதுரை நாயக்க மன்னர்களாலும், 18 ஆம் நூற்றாண்டில் மைசூர் அரசின் கீழ் திண்டுக்கல் மாகாணமாக 25 பாளையங்களில் ஒன்றாக இருந்தது. 1792 ஆம் ஆண்டு நான்காம் மைசூர் போருக்குப் பின் ஆங்கிலேய அரசின் கீழ் இருந்தது. பழநிமலையில், மலையடிவாரத்தில் உள்ள திருஆவினன்குடி கோயிலும், திருஆவினன்குடி ஆலயத்தில் வடகிழக்கில் சரவண பொய்கையும் காணப்படுகிறது.

தலசிறப்பு – இத்தலம் செவ்வாய் கிரகத்திற்கு உகந்தது. செவ்வாய் கிரகத்திற்கு அதிபதி முருகன், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் ஞானதண்டாயுதபாணி சுவாமியை வழிபடுவதால் செவ்வாய் தோஷம் நீங்கப்பெறுவர். பதினென் சித்தர்களில் ஒருவரான போகராலும் அவருக்குப்பின் அவரது சீடரான புலிப்பாணி முனிவராலும் வழிபட்டு வந்த ஞானதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலை முதன் முதலில் சேர மன்னர்கள் திருப்பணி செய்தனர். அதன் காரணமாகவே இத்தலத்தை வழிபடுவதற்கு கேரள மக்கள் அதிகமாக வருகை தருகின்றனர். பழனி மலை சுமார் 450 அடி உயரம் உடையது. 697 படிகளைக் கொண்டது. மலைக்குச் செல்ல படிகள் மட்டுமின்றி மின் இழுவை ரயில் (Winch) மற்றும் கம்பி வட ஊர்தி (Rope Car) உள்ளது. பாலாறு, பொருந்தலாறு, வத்தாறு, சுருளியாறு, கல்லாறு, பச்சையாறு எனப்படும் ஆறு நதிகள் இணைந்த சண்முகநதி இத்தலத்திற்கு மேற்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது.

தீர்த்தம் – சரவணப்பொய்கை, மற்றும் சண்முகநதி.

தலவிருட்சம் – நெல்லி மரம்.

அருளாளர்கள் பாடியது – அருணகிரிநாதரால் பாடல் பெற்றது.

கல்வெட்டுகள் – பழநி மலையில், பெருமான் கருவறையின் தெற்கு வடக்கு சுவர்களிலும் வியாழவரிசைகளிலும் மூன்று வரிசைகளிலும் எட்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை பதிமூன்றாம் நூற்றாண்டில் கோனேரின்மை கொண்டான் வீரபாண்டியத்தேவன், பதினைந்தாம் நூற்றாண்டின் மைசூர் வீரநஞ்சைய உடையார், விஜயநகரத்து கிருஷ்ணதேவராயர் ஆகியோரதும், சில சமீப காலத்தவையும் ஆகும். மேற்குறித்த அரசர்கள், தெய்வங்களுக்குரிய அன்றாட வழிபாட்டிற்கான பொருட்களுக்காக நஞ்சை, புஞ்சை முதலிய நிலங்களும், திருநந்தா விளக்கு திருவமுது. திருமஞ்சனம், பூமாலை முதலியவைகளுக்காக நிபந்தனைகள் ஏற்படுத்தியமை அக்கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

மலைக்கோயில் நடை திறந்திருக்கும் நேரம் – காலை 6 மணி முதல் இரவு 9மணி வரையும், திருவிழா விசேஷ காலங்களில் காலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை நடை திறந்திருக்கும்.

பூஜை முறைகள் – ஆறு காலபூஜை நடைபெறுகிறது. காலை 6.50 மணிக்கு விளாபூஜையும், காலை 8.00 மணிக்கு சிறுகாலசந்தி பூஜையும், காலை 9.00 மணிக்கு காலசந்தி பூஜையும், பகல் 12.00

மணிக்கு உச்சிகால பூஜையும், மாலை 5.30 மணிக்கு சாயரட்சை பூஜையும், இரவு 8.00 மணிக்கு இராக்கால பூஜையும் நடைபெறுகிறது.

முக்கியத்திருவிழாக்கள் – வைகாசி விசாகம், கந்தசஷ்டி, தைப்பூசம், பங்குனி உத்திரம்.

தங்கரதம் – தங்கரதம் இழுப்பவர்களுக்கு ரூ.2000/- கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மாலை 6.30 மணிக்கு சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது.

அன்னதானம் – நாள் முழுவதும் காலை 8.00 மணிமுதல் இரவு 10.00 மணி வரை திருக்கோயில் வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

தங்குமிட வசதிகள் – பக்தர்கள் தங்குவதற்காக திருக்கோயிலுக்கு அருகில் தண்டபாணி நிலையம், கார்த்திகேயன் விடுதி, சிறுகுடில்கள், கோசால குடில்களும், பேருந்து நிலையத்திற்கு அருகில் புகைவண்டி நிலையம் செல்லும் வழியில் அமைந்துள்ளது. திருக்கோயில் சத்திரத்தில் தங்கும் அறைகளும் உள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி எண்கள்.

திருக்கோயில் அலுவலகம்	- 04545 242236, 247765
மலைக்கோவில் அலுவலகம்	- 04545 242293
தண்டபாணி நிலையம்	- 04545 242325
கம்பி வட ஊர்தி அலுவலகம் (ரோப்கார்)	- 04545 247766



அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,
பழனிதிண்டுக்கல் மாவட்டம்.

(அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயில்)

அமைவிடம் : இத்திருக்கோயில் பழநி நகரில் பேருந்து நிலையத்திலிருந்து மேற்கே சுமார் 1 கிலோமீட்டர் தொலைவில் காரமடை என்னும் இடத்தில் தேரடியில் அமைந்துள்ளது.

இறைவி பெயர்
அருள்மிகு மாரியம்மன்

தலசிறப்பு : இத்திருக்கோயில் அமைப்பில் சிறப்பிடம் பெறுவது மாரியம்மன் கருவறையாகும். அதற்கு அடுத்து வெளிமண்டபத்தில் தெற்குப்பக்கம் விநாயகர் சிலையும், வடக்குப்பக்கத்தில் தண்டாயுதபாணி சுவாமி சிலையும் அமைக்கப்பட்டு இருப்பது சிறப்புடையதாகும்.

நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6.00 மணிமுதல் 12.00 மணி வரையிலும் மாலை 5.00 மணிமுதல் இரவு 8.30 மணி வரையிலும் சனிக்கிழமைகளில் இரவு 9.00 மணி வரை நடைதிறந்திருக்கும்.



பூஜை முறைகள் : இத்திருக்கோயில் காலை முதல் மாலை வரை தினசரி பூஜைகள் நடத்தப்பெற்று வருகிறது.

முக்கிய திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் சித்திரை மாதப்பிறப்பு, சித்திரைப்பூசம், சித்திராப்பௌர்ணமி, பஞ்சபிரகார மண்டகப்படி, வைகாசி விசாகம், ஆனித்திருமஞ்சனத் திருவிழா, ஆடிப்பெருக்கு, 5 ஆடி வெள்ளிக்கிழமை, உற்சவப்பெருக்கு, ஆடி அமாவாசை, பூரம், திருவோணம், ஆவணி அவிட்டம், விநாயகர் சதுர்த்தி, விஜயதசமி, திருக்கார்த்திகை, தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகிய திருவிழாக்கள் மிகச்சிறப்பாக கொண்டாடப்பெற்று வருகின்றது.

இத்திருக்கோயில், மாரியம்மன் திருவிழா தமிழ்நாட்டில் மிகச் சிறப்புடைய திருவிழாவாக விளங்கி வருகிறது. மாரியம்மன் திருவிழாவின் போது அருள்மிகு. தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் இணை ஆணையர் மற்றும் அறங்காவல் குழுத்தலைவர், ஊர்காணிக்கையாளர் ஆகியோர் தலைமையில் தேரோட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

தங்குமிட வசதிகள் : கோயிலுக்குஅ ருகில்த னியார்த ங்கும் விடுதிகள் உள்ளது.

இத்திருக்கோயில் இந்துசமய அறநிலைய ஆட்சிக்குட்பட்டு பழநி அருள்மிகு. தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபகோயிலாக விளங்கி வருகிறது.

பன்னிருகை முருகனுக்கு தமிழ் மாதத்தின் 12வது மாதமான பங்குனியில் 12வது நட்சத்திரமான உத்திரம் அன்று கல்யாண உற்சவம் நடத்துகிறார்கள்.

எல்லாவற்றையும் வெல்வது ஞானசக்தி அதுதான் வேல் அறிவுக்கு மூன்று லட்சணங்கள் ஆழம், அகலம்,கூர்மை, வேலின் அடிப்பகுதி ஆழ்ந்தும், இடைப்பகுதி அகன்றும், நுனிப்பகுதி கூர்மையாகவும் உள்ளது.



அருள்மிகு திருவாவினன்குடி திருக்கோயில், பழநி, திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் பழநி அருள்மிகு. தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலுக்குச் செல்லும் வழியில் முன் பாதையில் அமைந்துள்ளது.

இறைவன் பெயர்

அருள்மிகு குழந்தை வேலாயுதசுவாமி

தலசிறப்பு : திருவாவினன்குடிக் கோயிலே புராதன ஆதிகோயிலாகும். இத்திருத்தலத்திலே முருகப்பெருமாள் மயில் மீது அமர்ந்து குழந்தை வேலாயுதசுவாமி என்ற பெயருடன் விளங்குகின்றார். கால வரையறைக் கெட்டாத இக்கோயில் காரைக்குடி திரு.நா.மு.சுப இலட்சுமணன் செட்டியார் குடும்பத்தாரால் சிற்ப முறையிலே புதுப்பிக்கப்பெற்று 1910 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் நாள் மேற்படி குடும்பம் காரைக்குடி திரு.மு.சுப.சுப்பிரமணிய செட்டியார் அவர்களால் கும்பாபிஷேகம் நடந்தேறியுள்ளது.

நடைதிறக்கும் நேரம் : தினசரிகாலை 5.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் நடை திறந்திருக்கும்.



பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் காலை முதல் இரவு வரை தினசரி பூஜைகள் நடத்தப் பெற்று வருகிறது.

பழமையான இத்திருக்கோயில் கோபுரம் முன் மண்டபம் புதுப்பிக்கப்பட்டு, திருவாவினன்குடி திருப்பணிகள் திரு.நா.மு.சுப.லெட்சுமண செட்டடியார் அவர்களாலும், திரு.நா.மு.சுப.ராம.சுப இராமநாதன் செட்டியார் பி.எஸ்.சி. அவர்களாலும் மற்றும் குடும்பத்தார்களாலும் தொடங்கப்பெற்று நடைபெற்று முடிவுற்றது இவ்வாலயத்தில் பல புரானக் கல்வெட்டுகள் உள்ளன.

இத்திருகோயிலில் 25-11-1998 ஆம் ஆண்டு திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது. திருக்குட நன்னீராட்டு விழாவினையொட்டி திருப்புகழ் மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

திருவாவினன்குடிப் பெருமானுக்கு நாள்தோறும் ஆறு காலப் பூஜையும், மாதக் கார்த்திகைத் திருவிழாவுடன் மற்ற சிறப்புகளும் நடைபெற்று வருகின்றன. இத்தல விருட்சம் நெல்லியாகும்.

திருவாவினன்குடிக் கோயிலின் வடகிழக்கில் 'சரவணப் பொய்கை' அமைந்துள்ளது. அதனை சட்டிச்சாமியார் என்ற பெரியார் யாசகம் செய்து புதுப்பித்தார். இப்போது இது ஒரு ஆழகிய தடாகம். சுற்றிலும் கைப்பிடிச் சுவரெடுத்து படி வரிசைகள் கட்டப்பட்டுள்ளது.

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியைத் தரிசனம் செய்யும் பக்தர்கள் திருவாவினன்குடி குழந்தை வேலாயுதசுவாமியையும் தரிசனம் செய்து வாழ்வில் வெற்றிகளையும், வளங்களையும் பெற்றுச் செல்கின்றனர்.

தங்குமிட வசதிகள் : கோயிலுக்கு அருகில் தனியார் தங்கும் விடுதிகள் உள்ளது.

இத்திருக்கோயில் இந்துசமய அறநிலைய ஆட்சிக்குட்பட்டு பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபகோயிலாக விளங்கி வருகிறது.





அருள்மிகு பெரியநாயகிஅம்மன் திருக்கோயில், பழநி
திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் பழநி நகரின் மேற்குப்பக்கத்திலே பெருமிதமாக விளங்குகிறது.

இறைவி பெயர்
அருள்மிகு பிரஹந்நாயகி என்ற பெரியநாயகி அம்மன்

தலசிறப்பு : 16 ஆம் நூற்றாண்டிலே மதுரை நாயக்க மன்னர் காலத்ததாகும். நாயக்கர்களால் எடுக்கப்பட்டு பழநி, ஆயக்குடி, நெய்க்காரப்பட்டி நாயக்கர்கள் குடும்பத்தினரால் விரிவாக திருப்பணி செய்விக்கப் பெற்றதாகும். திருச்சன்னதிகளின் எதிரேயுள்ள மண்டபத்தூண்களில் இக்கோயிலைச் சீர்திருத்திப் பெருக்கிய பெரியோர்களின் உருவச்சிலைகளைக் காணலாம்.

நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6.00 மணிமுதல் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணிமுதல் இரவு 8.30 மணி வரையிலும் நடைதிறந்திருக்கும்.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் காலை முதல் மாலை வரை தினசரி பூஜைகள் நடத்தப்பெற்று வருகிறது.

இத்திருக்கோயில் கும்பாபிஷேகம் பழநி மக்களின் நினைவுக் கெட்டாத காலத்தில் நிகழ்ந்ததன் பின்னர் அடுத்த முறையாக 1940 ஆம் ஆண்டு பழநிமலை இராஜகோபுரம் கும்பாபிஷேகத்தை ஒட்டி 1940 செப்டம்பர் 5 ஆம் நாள் சிறப்புடன் நிகழ்ந்தது. அதன் பின்னர் 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2 ஆம் நாள் மலைக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாவினை அடுத்து 1974 மேத்திங்கள் 3 ஆம் நாள் இக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா சிறப்புடன் நடைபெற்றது. இத்தல விருட்சம் வில்வமாகும். சன்னதி அமைப்பு முதலில் பெரியநாயகி அம்மையார் நடுவில் வள்ளி தெய்வானையுடன் முருகப்பெருமான் அதனை அடுத்து கைலாசநாதப் பெருமான் சன்னதிகளாகும்.

இவைகளுக்கு தென்பாகத்தே அழகிய ஒரு பெரு மண்டபத்தில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி சன்னதி உள்ளது. வடபாகத்தே தெற்கு நோக்கிய நடராஜர் திருத்தளியும் சமீபகாலத்தே செட்டிநாட்டுத் தன வணிகர்களால் எடுப்பிக்கப்பட்டு 1907 ஆம் ஆண்டு பிரதிஷ்டக்கப்பட்டது.

முக்கியத்திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் முக்கியத்தி ருவிழாக்கள்மி கச்சிறப்பாகக்வெ காண்டாடப்படுகின்றன. தினசரி காலை முதல் மாலை வரை பூஜை வழிபாடுகள் நடத்தப்பெற்று வருகின்றன.

பக்தர்களுக்கு வேண்டியதை அளிக்கும் அருட்கடாட்சம் பொருந்திய தெய்வமாக பெரியநாயகியம்மன் விளங்குகிறது.

தங்குமிட வசதிகள் : கோயிலுக்கு அருகில் தனியார் தங்கும் விடுதிகள் உள்ளன.



அருள்மிகு பெரியாவுடையார் திருக்கோயில், பழநி
திண்டுக்கல் மாவட்டம்.
(அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயில்)

அமைவிடம் : இத்திருக்கோயில் பழநிக்கு வடக்காக பழைய தாராபுரம் வழியில் மூன்று கல் தொலைவிலும், திண்டுக்கல்லிருந்து பொள்ளாச்சி செல்லும் பாதையில் சண்முகநதி இரயில் பாலத்தை அடுத்து இருப்பதாகும். இக்கோயில் சண்முகநதியின் கிழக்குக்

இறைவன் பெயர்
அருள்மிகு பிரகதீசுவரர் (எ) பெரியாவுடையார்

தலசிறப்பு : பெரியாவுடையார் கோயில் அமைந்துள்ள இடம் கன்னிகாவரனம் எனத்தல புராணத்திலே கூறப்பெறுகிறது. இக்கோயில் சேரர்களாலும், பாண்டிய, கொங்குச்சோழ அரசர்களாலும் சமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாகும்.

இத்திருக்கோயில் ஈஸ்வரன் சுயம்புலிங்கம், மேற்குப்பார்த்த திருக்கோலம் சாலச்சிறப்புடையதாகும். சுவாமியின் பெயர் பிரகதீசுவரர் என்ற பெரியாவுடையார். இப்பெயருடைய சிவசன்னதிகள் அநேகம் சோழநாட்டில் சோழ அரசர்களால் எடுக்கபட்டனவாகக் காணலாம். இக்கோயிலின் திருமதில்களில் பொறிக்கப்பட்டிருந்த 16 கல்வெட்டுகள் திருப்பணி தொடங்கும் முன்னே அரசினர் கல்வெட்டு ஆராய்ச்சிக் கழகத்தாரால் படியெடுக்கப்பெற்றுள்ளன. பெரியவுடையாருக்கு மட்டும் சன்னதி உண்டு. திருமால், பிரம்மன் முதலிய எல்லாப் பரிவார தேவர்களுக்கும் தனிச்சுற்று ஆலயங்கள் உள்ளன. திருப்பணிக் காலத்தில் நவக்கிரக பிரதிஷ்டையும் செய்யப்பெற்றுள்ளது. இங்குள்ள தட்சிணாமூர்த்தி, சந்திரசேகர், திருமால், சண்டேசுவரர், கணபதி திருவுருவங்கள் மிக்க அழகும், சிற்பத்திறனும் உடையன.



நடைதிறக்கும் நேரம் : தினசரிகாலை 5.00 மணிமுதல் 12.00 மணி வரையிலும் மாலை 5.00 மணிமுதல் இரவு 8.30 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் இரவு 9.00 மணி வரை நடைதிறந்திருக்கும்.

பூஜை முறைகள் : இத்திருக்கோயில் காலை முதல் மாலை வரை தினசரி பூஜைகள் நடத்தப்பெற்று வருகிறது.

முக்கிய திருவிழாக்கள் : இத்திருக்கோயில் வைகாசி மாதத்தில் வைகாசி விசாகம், தை மாதத்தில் தைப்பூசத்திருவிழா, ஆனி உத்திர நட்சத்திரவிழா, ஆடி பதினெட்டாம் பெருக்குவிழா, ஆடி இலட்சார்ச்சனை ஆகியவை வருடாவருடம் மிகச்சிறப்புடன் நடைபெற்றுவருகிறது. இத்திருக்கோயிலில் பூஞ்சோலைகளும், வயலும் சூழ்ந்த சண்முக நதிக்கரையில் அமைந்து தூயதான இயற்கை வளம் நிரம்பியதாயிருத்தல் வழிபட வரும் மெய்யன்பர்களின் உள்ளத்தைக் கவர்கின்றது.

தங்குமிட வசதிகள் : கோயிலுக்கு அருகில் தனியார் தங்கும் விடுதிகள் உள்ளன. இத்திருக்கோயில் இந்துசமய அறநிலைய ஆட்சிக்குட்பட்டு பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலாக விளங்கி வருகிறது.

அருள்மிகு குழந்தைவேலப்பர் திருக்கோயில்
ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

(அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயில்)

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் இருந்து மேற்கே பழநி செல்லும் சாலையில் 2 கிலோ மீட்டர் தொலைவில் இயற்கை எழில் சூழ்ந்த மலைச்சாரலில் அமைந்துள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு குழந்தை வேலப்பர்

தலசிறப்பு : மயில் வாகனத்துடன் கூடிய அருள்மிகு குழந்தை வேலப்பரின் உருவத்திருமேனி எழில்மிகுந்த கற்சிலையால் ஆனது. இத்திருக்கோயிலின் தென்புறமாக மலைக்கோயில் 1500 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இம்மலைக்கோயிலுக்குச் செல்ல தொடக்கக்காலத்தில் நிறுவப்பட்ட கற்களாலான படிகள் உள்ளன. இம்மலைக்கோயில் முருகப்பெருமான் தண்டாயுதபாணியாக மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார்.

நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் நடைதிறந்திருக்கும்.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் தினசரி இருகால பூஜைகள் காலை 8.00 மணி அளவிலும் மாலை 6.00 மணி அளவிலும் செய்யப்பட்டு வருகிறது.

முக்கிய திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் தமிழ்ப்புத்தாண்டு விழா, ஆடி பதினெட்டாம்பெருக்கு, கந்தசஷ்டி விழா, திருக்கார்த்திகை விழா, தைப்பூசத்திருவிழா, பங்குனி உத்திரவிழா ஆகியவை வருடாவருடம் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்ப்புத்தாண்டு நாளன்று இவ்வட்டாரத்தில் வாழும் விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த தானியங்களைக்கொண்டு வந்து கோயிலில் சூறையாடிவிட்டு வழிபடுகின்றனர். அருள்மிகு குழந்தைவேலப்பர் வேண்டியவருக்கு வேண்டிய வரம் அருளும் தெய்வமாக விளங்கி வருகிறார். முருகன் திருக்கோயிலில் நடைபெறும் அனைத்து உற்சவங்களும் இத்திருக்கோயிலில் வெகுவிமர்சையாக நடைபெற்று வருகிறது.

தங்குமிட வசதிகள் : அடியார்கள் தங்கும் பொருட்டு ஒரு காவடி மண்டபம், இரண்டு திருமண மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் இந்துசமய அறநிலைய ஆட்சிக்குட்பட்டு பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபகோயிலாக



அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர் திருக்கோயில்

கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.

(அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயில்)

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் மாவட்டம், மலைகளின் இளவரசியான கொடைக்கானலில் சுமார் 7300 அடி உயரத்தில் குறிஞ்சித்தலைவன் குமரன் எழுந்தருளியிருக்கும் இடமாக விளங்குகிறது. பழநியிலிருந்து சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவில் இயற்கை எழில் சூழ்ந்த மலைச்சாரலில் அமைந்துள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர்

தலச்சிறப்பு : 1936 ஆம் ஆண்டு ஆங்கிலேய மாது ஒருவரால் கட்டப்பட்ட இத்திருக்கோயில் தற்போது தமிழ்நாட்டின் மிகப்பெரிதும், ஆறுபடை வீட்டின் ஒன்றானதுமான பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உப கோயில்களில் மிகப்பெரியதாகும்.

நடைதிறக்கும் நேரம் : இத்திருக்கோயிலின் சன்னதி தினமும் காலை 6-30 மணிக்குத் திறக்கப்பட்டு பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இரவு 7-30 மணி வரை இடைவிடாது திறந்தே வைக்கப்படுகிறது.

பூஜை முறைகள் : மதியம் 12-00 மணிக்கு உச்சிகால பூஜையும் மாலை 7-30 மணிக்கு சாயரட்சை பூஜையும் செய்விக்கப்படுகிறது.

முக்கிய திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் கந்தசஷ்டி விழா, திருக்கார்த்திகை விழா, தைப்பூசத்திருவிழா, பங்குனி உத்திரவிழா ஆகியவை ஆண்டுதோறும் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும், ஆண்டுதோறும் முருகனுக்கு நடைபெறும் அனைத்து திருவிழாக்களும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தங்குமிட வசதிகள் : கோயிலுக்கு அருகில் தனியார் தங்கும் விடுதிகள் உள்ளன. இத்திருக்கோயில் இந்துசமய அறநிலைய ஆட்சிக்குட்பட்டு பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலாக விளங்கி வருகிறது.

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,
ஆனந்தகிரி, கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் மலைகளின் இளவரசி எனப்போற்றப்படும். கொடைக்கானலில் மூஞ்சிக்கல் எனப்பெறும் ஆனந்தகிரியில் அமையப்பெற்றுள்ளது.

இறைவி பெயர்
அருள்மிகு மாரியம்மன்

தலசிறப்பு : சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாக செவி வழிச்செய்தி கூறுகிறது. 1962 ஆம் ஆண்டு கருவறை அர்த்தமண்டபம் புதிதாக கான்கிரீட் கட்டிடமாக கட்டப்பட்டது. கருவறை விமானமும் கட்டப்பெற்று திருக்குட நன்னீராட்டு செய்யப்பெற்றது. 1978 ஆம் ஆண்டில் கருவறை, அர்த்தமண்டபமும், மகாமண்டபமும், கட்டப்பெற்று 12.11.1978 அன்று திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா செய்யப்பட்டது.

நடைதிறக்கும் நேரம் : இத்திருக்கோயிலின் சன்னதி தினமும் காலை 6.30 மணிக்குத் திறக்கப்பட்டு பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக இரவு 7.30 மணி வரை இடைவிடாது திறந்து வைக்கப்படும்.

பூஜை முறைகள் : மதியம் 12-00 மணிக்கு உச்சிகால பூஜையும் மாலை 7.30 மணிக்கு சாயரட்சை பூஜையும் செய்விக்கப்படுகிறது.

முக்கிய திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் ஆண்டுப்பெருவிழா சித்திரைத் திங்களில் ஒன்பது நாட்கள் நடைபெறும். இதில் முதல் ஏழு நாட்கள் அன்னை அருள்மிகு மாரியம்மன் கொடைக்கானல் நகரில் பல்வேறு மண்டகப்படிகளில் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறாள். எட்டாம் நாள் செவ்வாய்க்கிழமை அன்று சக்திக்கரகமும், மாவிளக்கும் நடைபெறும். ஒன்பதாம் நாள் அக்னிச்சட்டி எடுத்து வருதலும், பறைவைக்காவடி எடுத்து வருதலும் சிறப்பு அம்சங்களாகும்.

தங்குமிட வசதிகள் : கோயிலுக்கு அருகில் தனியார் தங்கும் விடுதிகள் உள்ளன.



அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோயில்,
ரெட்டியார்சத்திரம் திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் செல்ல திண்டுக்கல் - பழநி நெடுஞ்சாலையில் திண்டுக்கல்லில் இருந்து 14 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ரெட்டியார்சத்திரம் வந்து அங்கிருந்து தெற்காகப் பிரிந்து செல்லும் சாலையில் 3 கிலோ மீட்டர் செல்ல வேண்டும்.

இறைவன் பெயர்
அருள்மிகு கோபிநாதசுவாமி

இத்திருக்கோயில் மலைமீது 450 அடி உயரத்தில் அமைந்துள்ளது. 619 படிகள் ஏறிச் செல்ல வேண்டும்.



நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் நடைதிறந்திருக்கும்.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் தினசரி பூஜைகள் காலையும் மாலையும் செய்யப்பட்டு வருகிறது.



இத்திருக்கோவில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றியதாக செவிவழிச் செய்தி தெரிவிக்கிறது.

முக்கியத்திருவிழாக்கள் : அருள்மிகு கோபிநாதர் கால்நடைகளின் தெய்வமாகப் பக்தர்களால் போற்றி வணங்கப்படுகிறார்.

அருள்மிகு கோபிநாதர் கால்நடைகளின் தெய்வமாதலால் மூலவர் புல்லாங்குழலுடனும், உற்சவர் கைகளில் வெண்ணெய் உருண்டைகளுடனும் காட்சி தந்து அருள் பாலிக்கிறார்.

இங்கு சன்னதியில் கிடைக்கும் தீர்த்தங்களையும், இம்மலையில் இருக்கும் புல்லையும் கால்நடைகளுக்குக் கொடுத்ததால் கால்நடைகளின் நோய் தீர்வதுடன், பசுக்களின் பால்வளமும் பெருகும் என்பது ஐதீகம். சனிக்கிழமை தோறும் ஆயிரம் லிட்டர் பாலுக்கும் அதிகமாக கோபிநாதப் பெருமாளுக்கு பாலாபிஷேகம் செய்யப்பெறுவது விசேஷமாகும்.

இத்திருக்கோயிலில் ஆண்டுதோரும் 3 நாட்கள் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி திருவிழாவும், ஐந்து வாரப் புரட்டாசி சனிவாரத் திருவிழாவும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தினசரி மூன்று காலப் பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோவில்

திண்டுக்கல் வட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : திண்டுக்கல் புகைவண்டி நிலையத்தில் இருந்து மேற்கு புறம் 3கி.மீ. தொலைவிலும் பேருந்து நிலையத்திலிருந்து மேற்குபுறம் 2கி.மீ. தொலைவிலும் திண்டுக்கல் நகரில் மையப்பகுதியில் மலைக்கோட்டை அடிவாரத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

இறைவி பெயர்
அருள்மிகு கோட்டை மாரியம்மன்

தல வரலாறு : இத்திருக்கோவில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்பது செவி வழிச்செய்தி. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறிய பீடமும் அம்மன் மூலஸ்தான விக்ரகம் மட்டுமே இருந்தது. மலைக்கோட்டையின் கிழக்குப்பக்கம் இருப்பதால் கோட்டைமாரியம்மன் என்று பெயர் வரபெற்றது. விஜயநகரப்பேரரசர் காலத்தில் போர்வீரர்களின் காவல் தெய்வமாக வழிபாடு செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளது. வேறு மாநிலங்களுக்கு யாத்திரை செல்பவர்கள் இந்த அம்மனை வழிபட்டுச் செல்வதால் இந்த அம்மன் திண்டுக்கல் மாவட்டத்தின் எல்லை அம்மனாகவும் இருந்து அருள்புரிகிறாள்.

தலச்சிறப்பு : திருக்கோவிலின்அ மைப்பில்சி றப்பிடம்பெ பற்றது கருவறையாகும். கருவறையில் ஒளி மிகுதியாக இராது. இக்கருவறை சிறியது. கோட்டை மாரியம்மன் மூலஸ்தான விக்ரகம் ஆவுடையார் பீடத்தில் அம்மன் அமர்ந்த நிலையில் உள்ளது. இந்த சிலையை தனியே எடுக்க இயலாது. அம்மனுக்குக் எட்டுக்கைகள் காணப்படுகிறது. வலது பக்கம் பாம்புடன் உடுக்கை, கத்தி, வேல், சூலாயுதம், இடது பக்கம் அரிவாள், வில், மணி, கிண்ணம், போன்றவை காணப்படுகின்றது. இச்சிலையின் பின்புறத்தில் ஒரு துவாரம் காணப்படுகிறது. இது அம்மனுக்குரிய சிறப்பம்சம் ஆகும் என சன்னிதானத்தினை பார்வையிட்டு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வியந்துள்ளார். ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 9,10,11, ஆகிய தேதிகளிலும் அக்டோபர் மாதம் 2,3. மற்றும் 4 தேதிகளிலும் காலை 6.20 மணி முதல் 6.40 வரை சூரிய ஒளிக்கதிர்கள் அம்மன் சிரசிலிருந்து முகத்தில் படிவது காண்பதற்கரிய காட்சியாகும்.

கொடிமரம், மூலஸ்தான அம்மன் கோபுரக்கலசம் முன்றையும் முன் அலங்கார மண்டபத்தின் மத்தியிலிருந்து ஒரே நேரத்தில் தரிசனம் பெறுவது சிறப்பம்சமாகும். அம்மை நோய் பாதிக்கப்பட்டவர்கள் சகல மதத்தினரும் அம்மனை வழிபட்டு விபூதிப் பிரசாதம், தீர்த்தம் பெற்றுக் குணமடைந்து வருகிறார்கள்.

நடைதிறக்கும் நேரம் : திருக்கோயிலில் காலை 7.00 மணிமுதல் 12.00 மணிவரையிலும் மாலை 4.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரையிலும் நடைதிறந்திருக்கும்.

தீர்த்தம் : கோட்டைக்கேணித்தீர்த்தம்.

தலவிருட்சம் : மூலஸ்தான அம்மனுக்கு வடக்குப் புறத்தில் உள்ள வேம்பு மரம்.

நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6 மணிமுதல் மதியம் 1 மணி வரை மாலை 4 மணிமுதல் இரவு 9 மணி வரையும், மார்கழி மாதத்தில் காலை 4.00 மணிமுதல் 11.30 மணிவரையும், மாலை 4.00 மணிமுதல் இரவு 8.30 மணிவரையும், மாசிப் பெருந்திருவிழா காலங்களில் காலை 5.00 மணிமுதல் இரவு 12.00 மணிவரையும் நடைதிறந்திருக்கும்.

பூஜை முறைகள் : தினமும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது. காலை 8.30 மணிக்கு காலசந்தி பூஜையும், பகல் 12.00 மணிக்கு உச்சிக்கால பூஜை, இரவு 8.30 மணிக்கு அர்த்த ஜாமபூஜையும் நடைபெறுகிறது.

முக்கியத் திருவிழாக்கள் : சித்திரை மாதப்பிறப்பு அம்மன் சிம்ம வாகனத்தில் வீதிஉலா, வைகாசி பஞ்சபிரகார உற்சவம் அம்மன் புஷ்பப்பல்லக்கில் வீதிஉலா, ஆணித் திருமஞ்சனம் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆடி வெள்ளிக்கிழமைகளில், ஆடி இரண்டாவது வெள்ளி உற்சவம் ஐந்து தினங்களில் வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் மற்றும் செவ்வாய் ஐந்து தினங்களில், ஆவணி ஞாயிற்றுகிழமைகள், புரட்டாசி சனிக்கிழமைகளில், நவராத்திரிக்கொழு உற்சவம் பதினோரு தினங்களில் கார்த்திகை மாதம் திங்கள்கிழமைகளில் கோடி தீர்த்ததுடன் 108 சங்காபிஷேகம், மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை திருவிளக்கு பூஜை, தை மாதப்பிறப்பு ரிஷப வாகனத்தில் அம்மன் வீதி உலா, தை வெள்ளிகிழகைளில், தைப்பூசம் நகரிலுள்ள மற்ற திருக்கோவில்களில் உற்சவ மூர்த்திகளுடன் இணைந்து குடகனாறு சென்று தீர்த்தமாடி, மின்புஷ்ப அலங்காரத்துடன் நகர்வலம் வருதல், மாசிப்பெருந்திருவிழா 20 நாட்கள் தொடர்ந்து நடைபெறுவதும் முக்கியத் திருவிழாக்களாகும்.

தங்கரதம் : தங்கரதம் இழுப்பதற்கு ரூ.1500/- கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தங்கரத சுவாமி புறப்பாடு இரவு 7.00 மணிக்கு நடைபெறுகிறது.

அன்னதானம் : தினசரி 100 நபர்களுக்கு மதியம் 12.00 மணிக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

தங்குமிட வசதிகள் : திருக்கோவிலுக்கு அருகில் தனியார் தங்கும் விடுதிகள் உள்ளன.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி எண் : 0451 2427267



மூலவர் மாரியம்மன்



கோயில் முன்தோற்றம்



கோயில் நுழைவுவாயில்

அருள்மிகு சௌந்திரராஜப்பெருமாள் திருக்கோவில்

தாடிக்கொம்பு, திண்டுக்கல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : திண்டுக்கல்லிலிருந்து 10 கி.மீ தொலைவில் வேடசந்தூர் செல்லும் வழியில் தாடிக்கொம்பு பஸ் நிறுத்தத்திலிருந்து அரை கி.மீ தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

இறைவன், இறைவி பெயர்

அருள்மிகு சௌந்திரராஜப் பெருமாள்
அருள்மிகு சௌந்திரவல்லித்தாயார்

தலபுராணம் : குடகனாறு ஆற்றங்கரையில் மண்டுக (தவளை) முனிவர் தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்குவதற்கு மதுரை திருமாலிஞ்சோலைக் கள்ளழகரை நோக்கி இத்தலத்தில் தவமிருந்த போது தளாசுரன் என்கிற அசுரனால் மண்டுக முனிவருக்கு இடையூறு ஏற்பட்டது. அந்த அசுரனை வதம் செய்து முனிவரின் வேண்டுகோளினை ஏற்று மதுரை திருமாலிஞ்சோலைக் கள்ளழகரே இவ்வூரில் சௌந்திரராஜப் பெருமாளாக சேவை சாதிக்கிறார். இதன் காரணமாக இத்திருக்கோயில் அழகர் திருக்கோயில் என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது.



தலவரலாறு : கி.பி 1522ம் வருடம் விஜயநகரப்பேரரசர் காலத்தில் அச்சுத தேவராயர் மற்றும் இராம தேவராயர் காலத்தில் இத்திருக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம். என கல்வெட்டுகளின் வாயிலாக அறியமுடிகிறது. தெலுங்கில் தாட்டி என்றால் பனை மரம் என்று பொருள். கும்புலு என்றால் கூட்டம் என்று பொருள் தாட்டிக்கும்பு என்ற பெயரே மாறுதலாகி தற்போது தாடிக்கொம்பு என்று அழைக்கப்படுகிறது.

தலச்சிறப்பு: மதுரை அழகருக்கு வேண்டிய பிரார்த்தனையை இத்தலத்திலுள்ள சுவாமியை அழகராகப் பாவித்துப்பிராத்தனை செலுத்தி இறைவன் அருள் பெறுகின்றனர். இத்தல மூலவருக்கு ஒவ்வொரு மாதமும் திருவோண பூஜையும், வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி மாதங்களில் பிதுர் சாப நிவர்த்திக்காக விஷ்ணுபதி புண்ணியகால பூஜையும் நடைபெறுகிறது. கல்விச் செல்வம் பெற ஹயக்கீரிவர் சரஸ்வதியும், உடல் ஆரோக்கியத்தினைப் பெற தன்வந்தரியும், பொருளாதாரச் சிக்கலால் ஏற்படும் தடை நீங்கப்பெருமாள் திருக்கோயிலில், எங்கும் காண முடியாத இத்திருக்கோயிலில் அமைந்துள்ள ஸ்ரீ சொர்ண ஆகார்ஷண பைரவருக்கு செய்யப்படும் தேய்பிறை அஷ்டமி பூஜையில் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்தும் நற்பலன் அடைகின்றனர். திருமணகாரியங்கள் தடைபடும் ஆண்கள் பெண்கள் இவ்வாலயத்தில் உள்ள ரதி மன்மதன் சிலைகளுக்கு ஐந்து வியாழக்கிழமைகளில் வந்து பூஜை செய்வதன் மூலம் திருமணத்தடை நீங்கப்பெறுகின்றனர். தாயார் சன்னதியில் இருக்கும் சிற்பத்தூண்கள் கலைக்கூடமாகவே காட்சியளிக்கின்றன.

ஊஞ்சல் மண்டபத்தில்ஒ ருப க்கத்திற்குஏ முதூ ண்கள் உள்ளன. ஒவ்வொரு தூண்களும் ஒவ்வொரு ஒலி கேட்கும் சரிகமபதநி என சப்த சுரங்கள் கேட்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. சக்கரத்தாழ்வாருக்கு தனிச்சன்னதியாக இரண்டு புறமும் தலைவாசலுடன் அமைந்திருப்பது வேறு எந்த ஆலயத்திலும் காணமுடியாத சிறப்பம்சமாகும்.

தீர்த்தம் : குடகனாறு தீர்த்தம்.

தலவிருட்சம் : வில்வமரம்

நடைதிறக்கும் நேரம் : திருக்கோயிலில் காலை 7.00 மணிமுதல் 12.00 மணிவரையிலும் மாலை 4.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரையிலும் நடைதிறந்திருக்கும்.


பூஜை முறைகள் : தினமும் மூன்று கால பூஜைகள் நடைபெறுகிறது.

முக்கியத்திருவிழாக்கள் : சித்ராப் பௌர்ணமித் திருவிழா 6 நாட்களும், ஆடிப்பிரமோற்சவத் திருவிழா 14 நாட்களும் நடைபெறுகிறது. பெரிய கார்த்திகைக்கு அடுத்த நாள் லட்சதீபத் திருவிழா, பங்குனி உத்திர திருக்கல்யாண திருவிழா இதர முக்கியத் திருவிழாவாகும்.

வெள்ளி ரதம் : வெள்ளி ரதம் இழுப்பவர்கள் ரூ.500/- கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. வெள்ளி ரதப்பவனி இரவு 7-00 மணியளவில் நடைபெறுகிறது.

அன்னதானம் : தினசரி 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் : 0451 2557232



ஸ்ரீ மன்மதன்



ஸ்ரீ ரதி

திருக்கோயில்கள் வழிகாட்டி - திண்டுக்கல் மாவட்டம்



ஸ்ரீ வேணுகோபாலன்



ஸ்ரீ சக்கரத்தாழ்வார்



ஸ்ரீ மஹாவிஷ்ணு



ஸ்ரீ வைகுண்டநாதர்




ஸ்ரீ ராமர் உடன் அனுமர்



ஸ்ரீ ஊர்த்தவ தாண்டவர்



ஸ்ரீ நரசிம்ம இரணிய யுத்தம்



ஸ்ரீ உலகளந்த பெருமாள்

திருக்கோயில்கள் வழிகாட்டி - திண்டுக்கல் மாவட்டம்



ஸ்ரீ தில்லை காளி



இரணிய சம்ஹாரம்



ஸ்ரீ கார்த்த வீரிய அர்ச்சுனர்



ஸ்ரீ அகோர வீரபத்திரர்



ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர்



ஸ்ரீ ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர்



ஸ்ரீ ருக்மினி சத்யபாமா சமேத
ஸ்ரீ வேணுகோபால சுவாமி



அருள்மிகு சௌந்திரராஜப் பெருமாள்

அருள்மிகு முத்தாலம்மன் திருக்கோயில், அகரம், திண்டுக்கல் வட்டம் மற்றும் மாவட்டம்.

அமைவிடம் : திண்டுக்கல்லிலிருந்து கரூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 10 கி.மீ. தொலைவில் தாடிக்கொம்பில் இருந்து மேற்கே அரை கி.மீ தொலைவில் திருக்கோயில் அமைந்துள்ளது.

இறைவி பெயர்
அருள்மிகு.முத்தாலம்மன்

இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்ற அம்சத்தில் மூன்று அம்மன்கள் தவக்கோலத்துடன் கருவறையில் உள்ளார்கள்.

தலவரலாறு : சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் ஆந்திர மாநிலம் விஜயநகரத்திலிருந்து சக்கராயர் என்ற அந்தணர் இந்த அம்மனை இங்கு கொண்டுவந்து ஸ்தாபிதம் செய்து வழிபாடு செய்து வந்ததாக வரலாறு கூறுகிறது. அதற்குப் பிறகு கோயில் பலகாலக் கட்டங்களில் விரிவுபடுத்திக் கட்டப்பட்டுள்ளது.





அகரம் ஸ்ரீ முத்தாலம்மன் திருக்கோயில் முகப்புத்தோற்றம்

தலச்சிறப்பு : இந்த அம்மன் மிகவும் சக்தி வாய்ந்தது. பக்தர்களின் தேவை எதுவானாலும் நிறைவேற்றித் தருபவர். திருமணத்தடை, குழந்தைப்பேறின்மை முதலிய தடைகள் உள்ளவர்கள் இந்த அம்மனை தரிசித்து தடைகள் நீங்கப் பெறுகின்றனர்.

தீர்த்தம் : குடகனாறு கோயிலுக்கு முன்பாகச் செல்கிறது. அந்த நதியே இந்தக் கோயிலின் தீர்த்தமாகக் கருதப்படுகிறது.

நடைதிறக்கும் நேரம் : காலை 7.00 மணிமுதல் 12.00 மணிவரையிலும்,பிற்பகல் 4 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் நடை திறந்திருக்கும்.

பூஜை முறைகள் : இரண்டு கால பூஜை நடைபெறும்.

முக்கியத்திருவிழாக்கள் : ஒவ்வோர் ஆண்டும் புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் ஆண்டுப் பெருந்திருவிழா நடைபெறுகிறது. இத்திருவிழாவிற்கு மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல்லாயிர கணக்கில் மக்கள் வருகின்றனர். திருவிழா நடத்துவதற்கு அம்மனிடம் பல்லி (கௌலி) சொல் மூலம் உத்தரவு கேட்பது வழக்கமாக இருந்து வருகிறது உத்தரவு கொடுத்த ஆண்டுகளில் மட்டுமே திருவிழா நடைபெறுகிறது. திருவிழாவில் மக்கள் அக்னிச்சட்டி எடுத்தல், பொம்மைகள் உடைத்தல், சேறு பூசி வேஷமிடுதல், முடிக்காணிக்கை செலுத்துதல், குழந்தைப்பேறு பெற்றவர்கள் குழந்தையைக் கறும்பு தொட்டில் மூலம் கோயிலுக்குக் கொண்டு வருதல் போன்ற பரிகாரங்கள் செய்யப்படுகின்றன. உற்சவ அம்மன் சுதையால் தனியாக உருவாக்கப்பட்டுத்திருவிழா நடத்தப்படுகிறது. உற்சவத்தில் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ள பண்டாரப்பெட்டியும் பல்லக்கின் மூலம் உலா வருகிறது.

தங்குமிட வசதிகள் : திண்டுக்கல் நகரில் தனியார் விடுதிகள் உள்ளன.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண் : 98657 72875



அருள்மிகு காளகஸ்தீஸ்வரர் திருக்கோவில், திண்டுக்கல் நகர், வட்டம் மற்றும் மாவட்டம்

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு மேற்கே சுமார் 1கிமீ தொலைவில் அமைந்துள்ளது. மதுரையில் இருந்து சுமார் 60கிமீ தொலைவில் உள்ளது. பழனியிலிருந்து 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இறைவன் இறைவி பெயர்
அருள்மிகு காளகஸ்தீஸ்வரர் சுவாமி,
அருள்மிகு ஞானாம்பிகை மற்றும்
அருள்மிகு பத்மகிரீஸ்வரர்,
அருள்மிகு அபிராமி அம்மன்

தலபுராணம் : இத்திருக்கோயில் அமைந்துள்ள ஊரானது புராண காலத்தில் திண்டிமாசூரன் என்ற அரக்கனால் நிர்மானிக்கப்பட்டு திண்டிமாசூரனை ஈஸ்வரர் வதம் செய்ததால் இத்திருத்தலம் தீண்டீஸ்வரம் என்ற பெயருடன் வழங்கிவந்தது. தீண்டீஸ்வரம் காலப்போக்கில் மருவி திண்டுக்கல் என்று அழைக்கப்படுகிறது.



வரதராஜபெருமாளுடன்
ஆஞ்சநேயர்



கருடாழ்வார்



மலைக்கோட்டை அடிவாரத்தில் உள்ள தீர்த்தம்



சுப்ரமணியர்





தல வரலாறு : இத்திருக்கோயில் சோழ, பாண்டிய, விஜய நகர பேரரசர்கள், மதுரை நாயக்க மன்னர்கள் யாவரும் பணிந்து போற்றி திருப்பணி செய்யப்பெற்ற பெருமையுடையது. சேர அரசன் தர்மபாலனால் திண்டுக்கல் மலை மீது அபிராமி அம்பிகைக்கும், பத்மகிரீஸ்வரருக்கும் ஆலயம் கட்டப்பட்டது. கி.பி. 1638ல் விஜயநகர அரசர் அச்சுத தேவராயரால் திருப்பணிகள் செய்து புதுப்பிக்கப்பட்டது. கி.பி.1788ல் திப்பு சுல்தான் மலைமீது கோட்டை கட்டும்போது நகருக்குள் இருந்த காளகதீஸ்வரர் திருக்கோயிலில் அபிராமி சமேத பத்மகிரீஸ்வரரை பிரதிஷ்டை செய்தனர்.

தலச்சிறப்பு : இத்திருக்கோயிலில் காளகதீஸ்வரர் பத்மகிரீஸ்வரர் பத்மகிரீஸ்வரர் இருமூர்த்திகளும் நகரின் நடுமையமாக இருந்து அருள் வழங்கி வருகின்றனர். திருநாவுக்கரசர் தேவாரப் பாசுரங்களில் திண்டீஸ்வரம் என்பது திண்டுக்கல்லைக் குறிப்பதாக டாக்டர் உ.வே.சாமிநாதஅய்யர் கூறுவதால் கி.பி.7ம் நூற்றாண்டிலேயே இந்நகர் பிரபலம் அடைத்திருக்க வேண்டும் எனத்தெரிகிறது. இத்தலம் ராகுகேது பரிகாரத்தலம். திருமணத் தடை உள்ளவர்கள் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் இம்மூர்த்திகளை வழிபட்டால் தடைகள் நீங்கப்பெறுவர்.

தீர்த்தம் : திருக்கோயில் மையத்தில் வற்றாத ஊற்றுடைய தீர்த்தக் கிணறு உள்ளது.

தலவிருட்சம் : நெல்லிமரம்

நடைதிருக்கும் நேரம் : காலை 6 மணிமுதல் நண்பகல் 12மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் நடை திறந்திருக்கும்.

பூஜை முறைகள் : தினசரி ஐந்து காலபூஜைகள் நடைபெருகிறது.

முக்கிய திருவிழாக்கள் : சித்திரை மாதத்தில் பெருந்திருவிழா பிரமோற்சவம் 12 நாட்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு தேரோட்டம் நடைபெறும்.

அன்னதானம் : தினசரி நன்பகல் 12 மணியளவில் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

தங்குமிட வசதிகள் : கோயில் அருகே தனியார் தங்கும் விடுதிகள் நிறைய உள்ளன.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 0451-2433229

அருள்மிகு காசி விஸ்வநாதர் சுவாமி திருக்கோவில்
ஆத்தூர், திண்டுக்கல்.

அமைவிடம் : இத்திருக்கோவில் திண்டுக்கலில் இருந்து மேற்கில் 17கி.மீ தொலைவில் ஆத்தூரில் அமையப்பெற்றுள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு காசிவிஸ்வநாதர்

நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் நடை திறந்திருக்கும்.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் தினசரி இருகால பூஜைகள் காலை 8.00 மணியளவிலும் மாலை 6.00 மணியளவிலும் செய்யப்பட்டு வருகிறது.

தலசிறப்பு : இத்திருக்கோவிலில் ஆண்டுதோறும் ஆருத்ரா தரிசனம் மார்கழி மாதத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

காசிக்குச் சென்று எம்பெருமானைத் தரிசிக்க இயலாத பக்தர்கள், ஆத்தூர் காசி விஸ்வநாதர் ஆலயத்திற்திற்குச் செல்வதன் மூலம் காசிக்குச் சென்று தரிசனம் செய்து வந்த உணர்வைப் பெறுகின்றனர்.

இந்நிலவுலகில் மக்கட் பிறப்புடைய உயிர்களுக்கு இறைவன் பலவகையான இன்பங்களைக் கூட்டுவிக்கிறார். அங்கனம் கூட்டுவித்த இன்பம் பெருகும் பொருட்டும், அவர் செய்த நன்றிக்கு அறிகுறியாகவும் நாம் அவ்விறைவனைத் திருக்கோயிலிலே சென்று வழிபட்டு வருகிறோம். அங்கனமே தேவர்களும், முனிவர்களும், நீண்ட வாழ்நாளும் நிலைத்த இன்பமும் பெற வேண்டி அப்பெருமானை காசியிலே சென்று நாள்தோறும் வணங்குவர். வாழ்வதும் வானவர்கள் தாம் வாழ்வின் மன நிறைவின்பால் தாழ்த்துவதும்த ரமுயர்ந்துத ம்மையெல்லாம்வெ தாழே வண்டித் தொடுத்த மலரோடு தூபமும் சாந்தும் கொண்டு எப்பொழுதும் வணங்குவர். இத்திருக்கோவிலில் அருள்மிகு காசிவிஸ்வநாதரை வழிபடும் பக்தர்களுக்கு நிலைத்த இன்பமும் பேரின்ப வீடும் கிட்டும் என்பதை வழிபடும் பக்தர்கள் மூலமாக காண முடிகிறது.

முக்கிய திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் விழாக்காலங்களில் சிறப்பு பூஜை வழிபாடுகள் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன.

அருள்மிகு வண்டிகாளியம்மன் திருக்கோயில், ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம்

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல்லிருந்து மேற்கில் 17கிமீ தொலைவில் ஆத்தூர் என்னும் கிராமத்தில் அமையபெற்றுள்ளது .

இறைவி பெயர்
அருள்மிகு வண்டிக்காளியம்மன்

முக்கியத் திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் பங்குனித் திருவிழா 7 நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. திருவிழா அன்று பல்லாயிரக்காணகான மக்கள் நடுவில் அம்மாள் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறாள்.

ஓராண்டு வண்டிக்காளியம்மன் பண்டிகையாகவும் மறு ஆண்டு முத்தாலம்மன் பண்டிகையாகவும் கொண்டாடப்படுகிறது.

அம்பாள் உருவப்படம் மட்டுமே உள்ளது. சிலை வடிவம் இல்லை விசேச சக்தி கொண்ட இவ்வம்மன், வேண்டியவர்களுக்கு வேண்டிய வரங்கள் வழங்கும் வல்லமை உடையது.

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் க. தருமத்துப்பட்டி, திண்டுக்கல் வட்டம்.

அமைவிடம்: க.தருமத்துப்பட்டி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மதுரை- பழநி நெடுஞ்சாலையில் செம்பட்டியிலிருந்து பழநி செல்லும் வழித்தடத்தில் சுமார் 6 கி.மீ. தொலைவில் அமையப்பெற்றது.

இறைவன் பெயர்
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி

நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் நடைதிறந்திருக்கும்

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் தினசரி இருகால பூஜைகள் காலை 8.00 மணி அளவிலும் மாலை 6.00 மணி அளவிலும் செய்யப்பட்டு வருகிறது.

முக்கியத்திருவிழாக்கள் : இத்திருக்கோயில் இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை சித்திரை மாதத்தில் சித்திரைத் திருவிழா 2 நாட்கள் ஊர் வழக்கப்படி நடைபெறுகிறது. மேற்படி சித்திரைத் திருவிழாவில் இதன் குழுக்கோயில்களாக அருள்மிகு காளியம்மன் அருள்மிகு பகவதியம்மன் ஆகிய இரு அம்மன்களின் திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அம்மனை வழிபட்டுச் செல்கின்றனர்.

அருள்மிகு சுப்பிரமணிசுவாமி திருக்கோயிலில் குழுக்கோயில்களாக அருள்மிகு விநாயகர் திருக்கோயில், அருள்மிகு காளியம்மன், அருள்மிகு பகவதியம்மன், அருள்மிகு ராமர் பஜனைமடம், ஆகிய திருக்கோயில்கள் உள்ளன. இத்திருக்கோயில்கள் கிராமப்புற திருக்கோயில்களாகும். இத்திருக்கோயில்களில் ஒருகால பூஜை மட்டும் மாலையில் நடத்தப்பட்டு வருகிறது.

இத்திருகோயிலில் விழாக்காலங்களில் சிறப்பு பூஜையும், வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

அருள்மிகு விக்னேஷ்வரர் வகையறா திருக்கோயில்கள் பழைய ஆயக்குடி பழனி வட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் பழநியிலிருந்து திண்டுக்கல் செல்லும் நெடுஞ்சாலையில் பழநியிலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

பழைய ஆயக்குடியில் பிரதான சாலையில் வடப்புறமாக அருள்மிகு விநாயகர் திருக்கோயில் அமைந்துள்ளது.

பழைய ஆயக்குடியிலிருந்து 1 கிலோமீட்டர் தொலைவில் உள்ள நந்தவனம்பட்டி என்ற கிராமத்தில் அருள்மிகு முத்துப் பேச்சியம்மன் திருக்கோயில் கிழக்கு முகமாக அமைந்துள்ளது.


பழநி சிவகிரிப்பட்டி அருள்மிகு இடும்பன் திருக்கோயில் பழனி – திண்டுக்கல் சாலையின் தென்புறத்தில் பழநியாண்டவர் கலைக்கல்லூரி பின்புறம், இடும்பன் திருக்குளக்கரை முன்புறமாக வடக்கு முகமாக அமைந்துள்ளது.

இறைவன், இறைவி பெயர்
அருள்மிகு விநாயகர்,
அருள்மிகு முத்துப் பேச்சியம்மன்
அருள்மிகு இடும்பன், அருள்மிகு விக்னேஷ்வரர்

பூஜை முறைகள் & முக்கிய திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் விநாயகர் சதுர்த்தித் திருவிழாவும், அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில் மற்றும் நந்தவனப்பட்டி அருள்மிகு முத்துப் பேச்சியம்மன் திருக்கோயில்களில் சுவாமிகள் மற்றும் அம்மனுக்கு குளிர்ச்சியூட்டும் வைகாசி மாதத் திருவிழாவும் சிவகிரிப்பட்டி அருள்மிகு இடும்பன் திருக்கோயிலில் தைப்பூசத் திருவிழாவும், பங்குனி உத்திரத் திருவிழாவும் முக்கிய திருவிழாக்களாக ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்திருக்கோயில் திருவிழாவின்போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்று கூடி இடும்பனைத் தரிசிக்கின்ற காட்சி கண் கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது.

திருக்கோயில்கள் வழிகாட்டி - திண்டுக்கல் மாவட்டம்





அருள்மிகு இடும்பன் திருக்கோயில்
சிவகிரிப்பட்டி, பழனி

அருள்மிகு கல்யாணியம்மன் சமேத
கைலாசநாத சுவாமி திருக்கோயில்
அ.கலையம்புத்தூர், பழநி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் பழநியிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் நெடுஞ்சாலையில் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அ.கலையம்புத்தூரில் பிராமணத்தெருவில் அமைந்துள்ளது.

இறைவன், இறைவி பெயர்
அருள்மிகு கைலாசநாதசுவாமி,
அருள்மிகு கல்யாணியம்மன்

தலசிறப்பு : இத்திருக்கோயிலில் அருள்மிகு சித்தி விநாயகர் சன்னதி பிரகார மண்டபத்தில் மேற்குப் பாகத்திலும், உள் மண்டபத்தில் அருள்மிகு கைலாசநாதசுவாமி சன்னதியும், அருள்மிகு கல்யாணியம்மன் சன்னதியும், சுப்பிரமணியசுவாமி சன்னதியும், நடராஜர் சன்னதியும் சூரியன், சந்திரன், பைரவர் சன்னதிகளும், மத்தியில் நந்தீஸ்வரர் சுவாமியும் அமர்ந்து அருள்பாலிக்கின்றார்.

நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் நடைதிறந்திருக்கும்.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் தினசரி இருகால பூஜைகள் காலை 8.00 மணி அளவிலும், மாலை 6.00 மணி அளவிலும் நடத்தப்பட்டு வருகிறது.

முக்கிய திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் மாதாந்திர விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. திருமணம் ஆகாத கன்னிப்பெண்கள் இத்திருக்கோயிலில் அமைந்துள்ள அருள்மிகு கல்யாணி அம்மனை அர்ச்சனை, ஆராதனை செய்து வழிபட்டால் விரைவில் திருமணம் கைகூடிவரும் என்பது தனிச்சிறப்பாகும்.

அருள்மிகு கதிர் நரசிங்கப்பெருமாள் திருக்கோயில்
கொத்தப்புள்ளி, திண்டுக்கல்.
(ரெட்டியார் சத்திரம் அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலின் உபகோயில்.)

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் – பழநி நெடுஞ்சாலையில் திண்டுக்கல்லில் இருந்து 13 கி.மீட்டர் தொலைவில் அமையப்பெற்றுள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு கதிர்நரசிங்கப் பெருமாள்

தலவரலாறு : இத்திருக்கோயில் விஜயநகர சாம்ராஜ்யத்தில் நாயக்கர்களால் கட்டப்பட்டுள்ளது.

தலச்சிறப்பு : இத்திருக்கோயிலில் மூலவர் அருள்மிகு கதிர்நரசிங்கப் பெருமாள் நரசிம்மர் திருமுகத்துடன் பக்தர்களுக்கு காட்சிதந்து அருள்பாலிக்கிறார்.

கருவறையில் அருள்மிகு கதிர் நரசிங்கப்பெருமாள், அருள்மிகு சீதேவி – பூதேவி உபயநாச்சியார்களுடனும் சிவலிங்கமும் எழுந்தருளியிருப்பது சிறப்பம்சமாகும்.

இத்திருக்கோவிலின் அக்னி மூலையில் ஆஞ்சநேயர் சன்னதி அமையப்பெற்றிருப்பது சிறப்பாகும். இச்சன்னதியில் காண்போரைக் கவர்ந்திழுக்கும் தோற்றத்துடன் 6 அடி 7அங்குல உயரத்தில் வீரமஹா ஆஞ்சநேயர் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். வீரமஹா ஆஞ்சநேயருக்கு பக்தர்கள் வடமாலை சாற்றி சேவித்து வணங்கி தங்கள் வேண்டுதல்களையும் எண்ணங்களையும் ஈடேற்றி வருகின்றனர்.

முக்கியத்திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் ஸ்ரீ நரசிம்மர் ஜெயந்தித் திருவிழாவும், வைகுண்ட ஏகாதசி (சொர்க்கவாசல் திறப்பு) விழாவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நடைதிறக்கும் நேரம் : இத்திருக்கோயிலில் தினசரி காலை 8-00 மணி முதல் மாலை 7-00 மணிவரை நடை திறக்கப்பட்டு பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



ஸ்ரீ வீரமகா ஆஞ்சநேயர்



அருள்மிகு. கதிர்நரசிங்கப்பெருமாள் திருக்கோயில்பிரகாரம்





முக்கியத் திருவிழாக்கள் : வைகாசி மாதத்தில் நடைபெறும் ஸ்ரீ நரசிம்மர் ஜெயந்தித் திருவிழாவும், மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு திருவிழாவும் முக்கிய திருவிழாக்களாகும்.

தங்குமிட வசதிகள் : திண்டுக்கல் நகரில் தனியார் தங்கும் விடுதிகள் நிறைய உள்ளன.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 0451 - 2050324

அருள்மிகு கதிர் நரசிங்கப்பெருமாள் திருக்கோயில்
கன்னிவாடி, திண்டுக்கல் மாவட்டம்.

(ரெட்டியார் சத்திரம் அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலின் உபகோயில்.)

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல்லில் இருந்து மேற்கில் சுமார் 18 கிலோமீட்டர் தொலைவில் கன்னிவாடி கிராமத்தில் அமைந்த சிறப்பு மிக்க கோயிலாகும்.

இறைவன் பெயர்
அருள்மிகு கதிர்நரசிங்கப் பெருமாள்

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் தினமும் ஒருகால பூஜை வழிபாடு நடந்து வருகிறது.

தல சிறப்பு : திருமாலின்ப த்துஅ வதாரங்களில்ஸ்ரீ ந ரசிம்ம அவதாரத்தில் பெருமாள் இத்திருக்கோயிலில் எழுந்தருளி உள்ளார்.

முக்கியத் திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் வைகாசி மாதம் ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி அன்று பக்தர்கள் திரளாக வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டுச் செல்கிறார்கள். மார்கழி மாதத்தில் சொர்க்கவாசல் திறப்பன்று அதிகாலை சிறப்பு பூஜை வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை முதல் மாலை வரை பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.



அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில்
சித்தரேவு, திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : அருள்மிகு.வ ரதராஜப்பெ ருமாள்தி ருக்கோயில் திண்டுக்கல்லில் இருந்து மேற்கில் 27 கிலோமீட்டர் தொலைவில் சித்தரேவு என்னும் கிராமத்தில் அமையப்பெற்றுள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு வரதராஜப் பெருமாள்

முக்கியத் திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் சித்ரா பௌர்ணமித் திருவிழா ஏழு நாட்கள் நடைபெற்று வருகிறது. ஆடி மாதத்தில் ஆடித்தீர்த்தம் ஒரு நாள் ஊர் பழக்க வழக்கப்படி நடைபெற்று வருகிறது.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் தினசரி ஒருகால பூஜை நடைபெற்று வருகிறது.

முக்கிய திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் சித்ராப் பௌர்ணமித் திருவிழாவின் போது சுவாமி அருகில் உள்ள அய்யம்பாளையம் சென்று ஆற்றில் இறங்கி எதிர்சேவை செய்து அய்யம்பாளையத்தில் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். திருவிழாவில் ஆயிரக்கணக்கில் சுவாமியைப் பக்தர்கள் தரிசனம் செய்து வழிபடுகின்றனர்.



அருள்மிகு ஸ்ரீ நிவாசப்பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல் நகர், திண்டுக்கல் வட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் நகரில் மலைக்கோட்டை அடிவாரத்தில் அமைந்துள்ளது. திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து மேற்கே சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு ஸ்ரீ நிவாசப்பெருமாள்

தலச் சிறப்பு : இத்திருக்கோயில் புராதனக் கோயிலாகும். கோயிலைச் சுற்றி பெரிய திருமதில் அமைந்துள்ளது. திருக்கோயிலின் நுழைவு வாயிலின் முன்னே தீபஸ்தம்பம் உள்ளது. அதன் தெற்கே விநாயகர் சன்னதி உள்ளது. திருக்கோயிலின் மஹா மண்டபத்தை அடுத்து உள்ளே வசந்த மண்டபமும், மூலவர் சன்னதியைச் சுற்றிவர பிரகாரமும் அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலில் அலமேலு மங்கா சன்னதி, ஆண்டாள் சன்னதி தனித்தனியாக அமைந்துள்ளது. தாயார் சன்னதியைச் சுற்றி வரும் பொழுது உற்சவ மண்டபம் தனியாக உள்ளது. அங்கு நவக்கிரக சன்னதியும் உள்ளது. அதன் அருகே உடையவர் சன்னதி தனியாக அமைந்துள்ளது. அலமேலுமங்கா தாயார் சன்னதி முன்னே கிருஷ்ணன், ஆஞ்சநேயர் சன்னதி அமைந்துள்ளது. அலமேலு பத்மாவதி சமேத ஸ்ரீ நிவாசப்பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார். எதிரே மஹா மண்டபத்தில் கருடர் சன்னதியும் உண்டு.



ஸ்ரீ தேவி, பூமா தேவி சமேத சீனிவாசப்பெருமாள்

முக்கியத் திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் சித்திரை மாதத்தில் சித்ராப்பௌர்ணமி, தீர்த்தவாரித் திருவிழா 2 நாட்கள், வைகாசி மாதத்தில் வைகாசி வசந்த உற்சவம் 10 நாட்கள், ஆனி மாதத்தில் ஆனிப்பெருந்திருவிழா 13 நாட்கள், ஆவணி மாதத்தில் கிருஷ்ணஜெயந்தி அன்று உறியடித்திருவிழா, புரட்டாசி மாதம் 10 நாட்கள் நவராத்திரி விழா, தீபாவளித் தினத்தன்று சிறப்பு பூஜை, கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை பாஞ்சராத்ர தீபம், மார்கழி மாதம் பகல் பத்து, இராப்பத்து உற்சவம் 21 நாட்கள், மார்கழி மாதத்தில் சொர்க்கவாசல் திறப்பு ஆகிய திருவிழா நாட்கள் சிறப்பாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் வைணவ பாஞ்சராத்ர சம்பிரதாயப்படி தினசரி மூன்று கால பூஜைகள் நடைபெற்று வருகிறது. திருப்பதி வெங்கடாசலபதி கோயிலுக்குச் செல்ல முடியாத வைணவ பக்தர்கள் இங்கு அருள்மிகு ஸ்ரீ நிவாசப்பெருமானை வணங்கிப் பேறு பெற்று வருகின்றனர்.



அருள்மிகு வழிகாட்டி விநாயகர் திருக்கோயில்
நேருஜி நகர், திண்டுக்கல்.

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் நகரில் நேருஜி நகர் ரயில்வே கேட் அருகே அமைந்துள்ளது.

தலச்சிறப்பு: சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் இத்திருத்தலம் அமைந்துள்ள இவ்விடத்தில் மௌனகுரு சுவாமி தங்கி இருந்தார். அவர் ஒரு பிள்ளையாரை இவ்விடத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார் ஞானமார்க்கத்திற்கு வழி காட்டும் முகமாக அமைத்த கோயிலை வழிகாட்டி விநாயகர் எனப் பெயரிட்டு வழங்கலாயினர்.

முக்கியத்திருவிழாக்கள் : இத்திருக்கோயிலின் உள்ளே சந்தான கோபால கிருஷ்ணன் சன்னதி, பாலசுப்பிரமணியன் சன்னதி, விஷ்னு துர்க்கை சன்னதி ஆகியன உள்ளன. வெளியே வீர ஆஞ்சநேயருக்கு தனிச்சன்னதி உண்டு.

இத்திருக்கோயிலில் வைகாசி மாதத்தில் முருகனுக்கு சிறப்பு ஆராதனை நடைபெறும். ஆடி மாதத்தில் வெள்ளிக்கிழமைகளில் விஷ்னு துர்க்கைக்கு சிறப்பு அலங்காரம் நடைபெறும். ஆவணி மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழா 5 நாட்கள் சிறப்பு பூஜைகள் நடைபெறும். கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை தீபவழிபாடு, மார்கழி தனூர் பூஜை ஆகிய விழாக்கள் வருடா வருடம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நடைதிறக்கும் நேரம் : காலை 6.00 மணிமுதல் 11.00 மணிவரையிலும், பிற்பகல் 4.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரையிலும் தரிசனத்திற்காக நடை திறந்திருக்கும்.

அருள்மிகு காளியம்மன் திருக்கோயில்,
ஒய்.எம்.ஆர்.பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் பேருந்து நிலையத்தின் அருகே கிழக்குப்பக்கம் உள்ளது.

இறைவி பெயர்
அருள்மிகு காளியம்மன்

தல சிறப்பு : இக்கோயில் 1816 ஆம் ஆண்டு கட்டப்பட்டிருக்கிறது. இதன் வெளிமண்டபம் 1969 ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.

பூஜை முறைகள் : இங்கு எழுந்தருளியுள்ள அம்மனுக்கு சிறப்பு வழிபாடு வைகாசி மாதம் நடைபெறும். இது இனிது நடைபெற்று முடிந்தபிறகே அருகிலுள்ள சிறு கோயில்களான ஸ்ரீ முருகன் கோயில், ஸ்ரீ கிருஷ்ணன் கோயில், முனிசிபல் காலனியைச் சேர்ந்த காளியம்மன் கோயில், செல்லாண்டியம்மன் கோயில், குமரன் திருநகர் காளியம்மன் கோயில் வழிபாடுகள் நடைபெறும்.

காரிய சித்தியடைவதற்கும், வாழ்க்கைப் பிரச்சினை தீர்த்து அதில் வெற்றி கொள்வதற்கும் அருள்மிகு.காளியம்மனை வழிபட்டால் உடனடிப் பலனுண்டு.

முக்கியத் திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறும். 3 நாள் திருநாளாக நடைத்தப்படுகிறது. கரகம்வைத்தல், முளைப்பாரி வளர்த்தல், அக்னிச்சட்டி எடுத்தல், ஆகிய பல்வேறு வைபவங்கள் சிறப்புடன் நடைபெறும். ஆடி மாதத்தில் கோட்டைம ாரியம்மன்உ ற்சவம்ந டக்கும்.அ ருள்மிகுே காட்டை மாரியம்மன் உற்சவம் நடக்கும். அருள்மிகு கோட்டை மாரியம்மன் இத்திருக்கோயிலில் 1 நாள் தங்கல் நடைபெறும். மார்கழி மாதத்தில் 30 நாட்களும் திருவிளக்குடன் கூடிய பூஜை நடைபெறும். தைத்திருநாள் வழிபாடும் சிறப்புடன் நடைபெறும்.

நடைதிறக்கும் நேரம் : இத்திருக்கோயிலில் தினசரி காலை ஒருகாலப் பூஜையும், காலை 6.30 மணிமுதல் 11.00 மணி வரையும், மாலை 5.00 மணிமுதல் 8.30 மணிவரையும் நடைதிறக்கப்பட்டு வழிபாடு நடைபெறும்.

அருள்மிகு செங்குந்தர் காளியம்மன் திருக்கோயில்,
திண்டுக்கல் நகர், திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் பத்மபுரி என்றும் தீண்டீச்சுரம் என்றும் புராண வரலாற்றுச் சான்றுகளால் அறியவரும் இன்றைய திண்டுக்கல் மாநகரின் மையத்தில் முக்கிய வீதியில் அமையப்பெற்ற சிறப்புமிக்க திருத்தலங்களில் ஒன்று.

இறைவி பெயர்
அருள்மிகு காளியம்மன்

தல சிறப்பு : சக்திவடிவாய் அரூபமாய் உறையும் அன்னை காளியின் அற்புத வழிபாட்டுத்தலமாக பல நூற்றாண்டுகளாக விளங்கி வருகிறது.

தாய்க்கடவுள் வழிபாடு உலகெங்கும் பரவி நின்றதொரு வழிபாட்டுமுறை, மொகஞ்சதரோ, ஹரப்பா ஆகிய இடங்களை அகழ்வராய்ச்சி செய்த போது தாய்க்கடவுள் வழிபாட்டின் சுவடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே இவ்வழிபாடு வேத வழிபாட்டிற்கும் முந்தியது எனலாம்.

தாய்க்கடவுள் வழிபாட்டில் இரண்டு வகையுண்டு. ஒன்று அருள்நிலை மற்றொன்று மறநிலை (போர்க்குறிகளுடன் கொண்டது) தொல்காப்பியர் மாடுபிடி சண்டை என்ற வெட்சியில் கொற்றவை என்ற தாய்க்கடவுளைக் குறிக்கிறார். வீரர்க்கு வெற்றி தந்து பகைவரை அழிக்கும் தாயே கொற்றவை எனலாம். வீரர்படையின் முன்னே இந்த கொற்றவை செல்வாள் என்று அக்கால மக்கள் நம்பினர். பழைய சங்க காலத்திலேயே காடுகிழா அள் பழையோள் என்று பலவகை தாய்க்க டவுள்வ ழிபாடுகள்ந டைபெற்றன.வீ ரர்கள்க ளவேள்வி நடத்தினர். இதனை கடவுளுக்குச் செய்யும் வேள்வியாகக் கருதினர். காளியின் செயல் கொடுமையையும் தீமையையும் அஞ்ஞானத்தையும் போக்கும் வேள்வி என்பர். பல்லவர் காலத்தில் மகிஷாசுரமர்த்தினியின் கோலம் தமிழ்நாடு முழுவதும் பரவியது. மாமல்லபுரத்தில் இந்தக் கடவுளின் கோலம் இன்றும் காட்சியளிக்கிறது. உலகினை அழித்து விளையாடிய காளியை சிவன் கூத்தாடி வென்ற கதையே ஊர்த்துவத் தாண்டவத் திருக்கதை. காளி வழிபாட்டிலும் சிவ வழிபாடு உயர்ந்தது எனக் காட்ட எழுந்த கதை இது.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் எழுதிய வேட்டுவ வரியில் சிவன், திருமால், பிரமன் என்ற மூவரும் காளியை வழிபடுகிறார்கள் என்ற குறிப்பை காட்டுகிறார்.

அரி அரன் பூமோன் அகமலர் மேல் மண்ணும் விரி கதிர் அம்சோதி விளக்காகியே நிற்பாய் என்பது அந்த வேட்டுவரி. இத்தகைய சிறப்பிற்குரிய காளிக்கு திண்டுக்கல்லில் திருக்கோயில் எழுப்பி குலம் காக்கும் தாயெனப் போற்றி, செங்குந்தர் இசை வேளாளர் மரபினர் வணங்கி வருகின்றனர்.

இத்திருக்கோயிலில் அம்மனுக்கு உருவச்சிலை இல்லை. பீடம் மட்டுமே உள்ளது அன்னையை அரூபமாக நினைத்து, கரகம் பாலித்து வழிபடும் முறை இதன் சிறப்பு அம்சமாகும். அம்மனுக்கு ஆண்டுதோறும் பிரம்மோற்சவத்தின் போது கரகம் வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. சிம்ம வாகனத்தில் அம்மன் வீற்றிக்கும் சிறப்பான திருவுருவப்படம் நடுநாயகமாக வைக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர செங்குந்தர் இசை வேளாளர் சமூகத்தினரால் வழிபடக்கூடிய பாண்டுரங்கன், பண்டரியாய் திருவுருவப்படம் வைக்கப்பட்டு தீபாராதனை வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலில் சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டுக்கு சிறப்பு பூஜை வழிபாடு நடத்தப்படுகிறது.ஆடிமாதம் ஆடிப்பெருந்திருவிழா ஆடித்திங்கள் பதினெட்டாம் நாள் கொண்டாடப்படுகிறது. சரஸ்வதி பூஜை மற்றும் தீபாவளிப்பண்டிகை தினங்களில் வழிபாடு பூஜை, தீபாராதனை நடைபெறும், கார்த்திகை மாதங்களில் கார்த்திகை தீப அலங்காரம் செய்யபட்டு பூஜை நடத்தப்படுகிறது. மார்கழி 30 தினங்களும் காலை 5.00 மணிக்கு தொடங்கி 6.30 மணிவரை சிறப்பு வழிபாடு நடைபெற்று வருகிறது. தைத்திங்கள் முதல் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பூஜை தீபாராதனைகள் நடத்தப்படும் பிரமோற்சவத் திருவிழா திங்களில் கொண்டாடப்படும். அம்மனுக்கு காப்புக்கட்டுதல், முளைப்பாரி, கரகம் பாலித்தல், மாவிளக்கு ஏற்றுதல், மஞ்சள் நீராட்டம் முதலியன வெகு விமரிசையாக நடைபெறும்.

இத்திருக்கோயிலில் அம்மன் கரகம் இத்திருக்கோயிலிலேயே கரைக்கப்படுவது சிறப்பு அம்சமாகும். முளைப்பாரியும் கரகமும் செவ்வாய்க்கிழமையன்று நகர்வலம் வரும்.



அருள்மிகு வெள்ளை விநாயகர் திருக்கோயில், திண்டுக்கல் நகர்

(செங்குந்தர் காளியம்மன் திருக்கோயிலின் உபகோயில்)

அமைவிடம் : இத்திருக்கோயில் நகரின் மத்தியில் மணிக்கூண்டு சமீபத்தில் அமைந்துள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு வெள்ளைவிநாயகர்

தலச்சிறப்பு : நந்தியாவட்டை என்ற மலர் வெள்ளை நிறத்தை உடையது. இந்த மலரை மாலையாகத் தொடுத்து விநாயகருக்குச் சூட்டி வழிபடுவதால் இதற்கு வெள்ளை விநாயகர் திருக்கோயில் எனப் பெயர் வந்தது. இச்செய்தி அபிராமி அம்மன் மகாத்மியம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருக்கோயில்கள் வழிகாட்டி - திண்டுக்கல் மாவட்டம்

மேலும் விநாயகருக்கு பக்தர்கள் சன்னதிக்குள் வந்து தாங்களே திருநீறு தூவி வழிபடுவதால் விநாயகர் வெள்ளை நிறத்தில் காட்சி அளிப்பதாகவும் இப்பெயர் பொருத்தமாயுள்ளது. அருகு, வெள்ளை அரளி, வெள்ளெருக்கு ஆகியவையும் சூட்டப்படுகின்றன. சாது ஒருவர் இங்கு அடக்கமாகி உள்ளார். அதன் மேல் விநாயகர் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதால் இத்தலத்திற்கு வரும் பக்தர்கள் எல்லா வளமும் நலமும் பெற்றுச் செல்கின்றனர்.


இத்திருத்தலத்தில் சித்திரைத் தமிழ்வருடப்பிறப்பு நாள் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்திப் பெருவிழா 19 நாட்கள் நடைபெறும். தினசரி இரவு தேவார திருவாசக இன்னிசை நிகழ்ச்சியும், ஏராளமான கலை நிகழ்ச்சிகளும், நாதஸ்வரக்கச்சேரி, கதாகலாட்சேபம், இசைச்சொற்பொழிவு, பட்டிமன்றம், வழக்காடு மன்றம், விகடக்கச்சேரி, தனிச்சொற்பொழிவு, ஆகிய தினசரி இரவு 9.00 மணிமுதல் 12.00 மணிவரை நடைபெறும். சரஸ்வதி பூஜை புரட்டாசியில் சிறப்புடன் கொண்டாடப்படும். தீபாவளிப் பண்டிகைக்கு சிறப்பு வழிபாடு பூஜை ஆகியன செய்யப்படுகிறது.

கார்த்திகை தீபத்திருநாள் தீப அலங்காரத்துடன் கலையழகுடன் கொண்டாடப்படுகிறது. மார்கழியில் 30 நாட்களும் காலை 5.00 மணிமுதல் 6.30 மணிவரை சிறப்பு வழிபாடு நடத்தப்பெற்று வருகிறது.

தைப்பொங்கல், தைப்பூசத்திருநாட்கள், சிறப்புடன் நடத்தப்படுகின்றன. தைப்பூசத்தன்று திண்டுக்கல்லில் உள்ள அனைத்துக்கே காயில்உ ற்சவமூ ர்த்திகளும்கு டகனாறுெ சன்று தீர்த்தம் ஆடிவருவது வழக்கம். அப்போது மின் அலங்காரத்துடன் அருள்மிகு வெள்ளை விநாயகர் உற்சவ மூர்த்தி முதலாவதாக வருவார். மாசி மாதத்தில் சிவராத்திரி பூஜை இரவு முழுவதும் நடைபெறும். திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் முன்னிலையில் 1993 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

தினசரி காலை முதல் மாலை வரை பூஜைகள் நடத்தப்பெற்று வருகின்றது. முக்கியத்திருவிழா நாட்களில் விஷேச பூஜைகள் நடத்தப்படுகின்றன.

விழாக்காலங்களில் பக்தர்கள் ஒன்று கூடி அருள்மிகு வெள்ளை விநாயகரைத் தரிசனம் செய்கின்றனர். வேலை, கல்வி, திருமணம், ஆகியவற்றை அருளும் சக்தி படைத்தவராக அருள்மிகு வெள்ளை விநாயகர் விளங்குகின்றார்.

அருள்மிகு ஆஞ்சநேயப்பெருமாள் திருக்கோயில், மலையடிவாரம், திண்டுக்கல்

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் நகரில் உள்ள மலைக்கோட்டை அடிவாரத்தில் அமைந்துள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு ஆஞ்சநேயப்பெருமாள்

தலச்சிறப்பு : 8-2-1973 ஆம் ஆண்டு ஆன்மிகப் பெரியோர்களால் கும்பாபிஷேகம்மி கச்சிறப்பாகந டத்தப்பட்டது.ே காயில்மு கப்பில் கிணறும், கிருஷ்னர் சன்னதியும் உள்ளது. இச்சன்னதியிலிருந்து சிறிதுதூரம் சென்று மலைச்சாரலில் படியேறினால் ஆஞ்சநேயர் சன்னதி அமைந்துள்ளது. கோயிலின் முன்புறம் குளமும், பின்புறம் சென்று படியேறினால் மலைக்கோட்டையும் அமைந்துள்ளது. இச்சிறப்பு மிக்க ஆலயத்தில் அருள்மிகு ஆஞ்சநேயர் இடது கையில் பத்மம், வலது கையில் அபயகரமாகவும் இடுப்பில் கத்தியும், பாதங்களில் பாதச்சுவடும் அணிந்து யுத்தக்கோலத்தில் காட்சியளிக்கிறது.

நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் நடைதிறந்திருக்கும்.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் இருகால பூஜைகள் செய்யப்பட்டு வருகிறது.

முக்கியத்திருவிழாக்கள் : இத்திருக்கோயிலில் ஒவ்வொரு பங்குனி மாதம் ஸ்ரீராம நவமி 10 நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆடி 18ஆம் நாள் ஆன்மீக பக்தர்கள் அருள்மிகு ஆஞ்சநேயர் பெருமானைத் தரிசனம் செய்து பெரும்பேறு பெற்று வருகிறார்கள் ஆவணி மாதம் கிருஷ்ணஜெயந்தி மிகச் சிறப்பாக 10 நாட்கள் திருவிழா நடத்தப்படுகிறது.

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனான ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி, லெட்சுமணன், ஸ்ரீதேவி சமதேருடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமாள், திண்டுக்கல் மலையடிவாரத்தில் வீற்றிருந்து கலியுகத்தில் கேட்டவருக்குக் கேட்டவரம் அளித்து, திண்டிமாநகர மக்களைக்காத்து வரும் காவல் தெய்வமாக விளங்குகிறார். திரேதாயுகத்தில் இலங்கையில் மேற்படி இராமபிராமனுக்கும், இராவணனுக்கும் யுத்தம் நடந்தது. இராவணனுடைய புத்திரன் இந்திரஜித் பிரம்மாஸ்திரத்தை லெட்சுமணன் மீது ஏவ, லெட்சுமணன் மூர்ச்சை ஆகி விழுந்து விடுகிறார். மிகுந்த சோகத்துடன் ஸ்ரீ ராமபிரான் இருப்பதைக்கண்டு ஸ்ரீ ஆஞ்சநேயர் லெட்சுமணன் மூர்ச்சை தெளிய இமயமலை அருகேயுள்ள சஞ்சீவீ மூலிகையைக் கொண்டுவரச் சொல்கிறார். அங்கு அவருக்கு மூலிகை புலப்படாததால் சஞ்சீவி மூலிகை உள்ள மலையுடன் திரும்பி இலங்கையை நோக்கி வான்மார்க்கமாக வந்துகொண்டு இருக்கும்போது திண்டி மாநகர் அருகே வரும்பொழுது, திண்டிமாநகரை ஆட்சி செய்து வந்த திண்டாசுரன், ஸ்ரீ ஆஞ்சநேயரைத் தடுத்து நிறுத்தி, நீ என்னுடன் யுத்தம் செய்து என்னை ஜெயித்துவிட்டுச் செல்லலாம் என்று சொல்ல அதன்படி ஸ்ரீ ஆஞ்சநேயருக்கும் திண்டாசுரனுக்கும் யுத்தம் நடந்தது. அதில் திண்டாசுரனை வதம் செய்து கொன்றுவிட்டார். திண்டாசுரன் சாகும் தருவாயில் தனது கடைசி விருப்பமாக பின்வருமாறு சொல்கிறார். 'ஆஞ்சநேயா என்னை நீ கொன்றுவிட்டாய் ஆகவே யுத்தம் முடிந்தவுடன் இங்கு வந்தமர்ந்து ஜனங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து யுகம் யுகமாய் இருந்து மக்களைக்காத்து அருள்வாயாக,'இ துவேஎ னதுவே ண்டுகோள்எ ன்றுசொ ல்லி, திண்டாசுரன் இறந்து விட்டான். அந்த வேண்டுகோளின்படி ஸ்ரீ ஆஞ்சநேயர் திண்டி மாநகரில் வீற்றிருந்து காலங்காலமாக ஜனங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து அருள்பாலித்து வருகிறார்.

தங்குமிட வசதிகள் : அடியார்கள் தங்கும் பொருட்டு ஒரு காவடி மண்டபம், இரு திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

அருள்மிகு மந்தைக்காளியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்.

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் நகரின் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் மேற்கே மலைக்கோட்டைக்குச் செல்லும் பாதையில் அமையப்பெற்றது.

இறைவி பெயர்
அருள்மிகு மந்தைக்காளியம்மன்

தலசிறப்பு : இத்திருக்கோயில் அமைந்துள்ள இடத்தில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு மரங்கள் அடர்ந்த மந்தை இருந்தது. இவ்விடத்தை மக்கள் ஆடு மாடுகள் அடையப் பயன்படுத்தி வந்தனர். ஒரு சமயம் இவ்விடத்தில் ஆடு, மாடுகள் அடைத்து வைத்து ஓய்வு எடுக்கும் பொழுது அவர்களில் ஒருவர் மூலமாக இவ்விடத்தில் காளியம்மன் கோயில் ஒன்றினை அமைக்கும்படி காளியம்மன் உத்தரவிட்டதாகவும் அதன் மூலமாக மந்தையில் கட்டப்பட்ட ஆலயமே பிற்காலத்தில் மந்தைக் காளியம்மன் ஆலயம் என அழைக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இத்திருக்கோயில் மூலவர் சன்னதி வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இம் மூலஸ்தானத்தில் மந்தைக்காளியம்மன் வடக்கு நோக்கி நின்ற கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் தினமும் ஒருகால பூஜையும், பிரதி செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு பூஜைகளும் நடைபெற்று வருகிறது.

முக்கியத் திருவிழாக்கள் : ஒவ்வொரு மாதாந்திரப் பௌர்ணமி, அமாவாசை தினங்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலில் வருடாந்திர உற்சவமாகி வைகாசிப் பெருந்திருவிழா மூன்று நாட்களும், ஆடி 18 நவராத்திரி, தீபாவளி, திருக்கார்த்திகை தனுர் மாத பூஜை, தைப்பொங்கல் ஆகிய விஷேசங்கள் சிறப்பாக நடைபெறுகிறது.

அருள்மிகு வண்டிகாளியம்மன் திருக்கோயில் திண்டுக்கல்.

அருள்மிகு வண்டிக்காளியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் நகர். இத்திருக்கோயில் திண்டுக்கல் நகரில், வாணிவிலாஸ் மேட்டில், தாடிக்கொம்புரோடு, பழநி ரோடு சந்திக்கும் இடத்தில் அமையப் பெற்றுள்ளது. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு வண்டியில் இந்த அம்மனை ஏற்றி வந்ததாகவும், மேற்படி வண்டி இந்த இடத்தில் வரும் போது அச்சு ஒடிந்ததாகவும் இந்த இடத்திலிருந்து வேப்பமரத்தடியில் அம்மனை இறக்கி வைத்துவிட்டு வண்டியினைப் பழுதுபார்த்து, திரும்ப எடுத்துச்செல்ல முயற்சிக்கும்போது தான் இவ்வேப்ப மரத்தடியில் குடிகொண்டதாகவும், கஷ்டம் நிவர்த்தி வேண்டி வருகைதரும் பக்தர்களுக்கு அருள்பாலிப்பதாகவும், அம்மன் தெரிவித்து அமர்ந்துவிட்டதாகவும் செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்திருக்கோயிலில் பங்குனி மாதத்தில் வெகுச்சிறப்பாக 11 நாட்கள் திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்மன் கோரைப்பற்களுடன் காட்சி தருவது மிகச் சிறந்த அம்சமாகும். கோபாவேசத்துடன் வருகை தந்த இந்த அம்மன் வேப்பமரத்தடியில் கோபம் தணிந்து அமர்ந்திருந்ததாக ஐதீகம், இன்றும் இத்திருக்கோயிலின் ஸ்தல விருட்சமாக வேப்பமரம் இருந்து வருகிறது.



அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
திருமலைக்கேணி, திண்டுக்கல்.

அமைவிடம் : திண்டுக்கல்லிலிருந்து செந்துறை நெடுஞ்சாலையில் இருந்து 20கி.மீ. தொலைவில் செங்குறிச்சி என்ற இடத்தில் உள்ளது

இறைவன் பெயர்
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி

தலவரலாறு : திரும்பும் திசைதோறும் மலைகளால் சூழப்பட்டுள்ள திருத்தலம் திருமலைக்கேணி ஆகும். இப்பகுதி மக்கள் இத்திருதலத்தை மலைக்கிணறு என்று அழைத்து வந்ததாக தெரிகிறது. கிணறும் கேணியும் ஒரு பொருள். எனவே மலைக்கேணி என்கின்ற பெயர் இத்திருத்தலத்திற்கு வந்ததாக தெரிய வருகிறது.

தலச்சிறப்பு : குன்று தோறாடும் குமரன் இத்தலத்தில் பழநி ஆண்டவர் திருக்கோலத்தோடு விளங்கி வருகிறார். மேலும் இங்கு மலைமேல் மருந்தாக விளங்கும் பரம்பொருளாக முருகக்கடவுளைத் தண்டபாணி என்றே மக்கள் அழைத்து அனுதினமும் வழிபாடு செய்து வருகின்றனர். இத்திருத்தலத்திற்கு வரும் முருகபக்தர்கள் மலைச்சாரல் இடையே அருள் வெள்ளமாக ஓடிவரும் வற்றாத ஜிவ ஊற்றாகிய புண்ணியத் தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபடுகின்றனர். நாகதோஷம் உடையவர்கள் இத்திருத்தலத்திற்கு வந்து வழிபட்டுச் சென்றால் நாகதோஷம் நிவர்த்தி பெறுகிறார்கள். வனப்புமிக்க மலைச்சாரலில் அமைந்துள்ள இத்தலம் திண்டுக்கல் மாவட்டச் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

தீர்த்தம் : இத்திருக்கோயிலில் முருகப்பெருமான் வீற்றிருக்கும் இரு புறங்களிலும் வள்ளி சுனை ஒன்றும், தெய்வானைச் சுனை ஒன்றும் என இரு ஜீவ ஊற்றுக்கள் உள்ளன. மேற்படி ஊற்றுக்களில் தெய்வானை ஊற்று நீர் எக்காலத்திலும் வற்றாமலும், குமுமையாகவும் உள்ளது. வள்ளி சுனை எக்காலத்திலும் வெது வெதுப்பாகவும், வற்றாமலும் அமையப் பெற்றுள்ளது இத்திருத்தலத்தின் வரப்பிரசாதமாகும்.

தீர்த்தம் : திருக்கோயிலுக்கு அருகாமையில் 1 கி.மீதொலைவில் அமைந்துள்ளது வற்றாத ஊற்றுடைய கிணறு.

தலவிருட்சம் : பவளமல்லி மரம்

கல்வெட்டுக்கள் : திருக்கோயில் திருப்பணி செய்யப்பட்ட விவரம் கல்வெட்டில் காணப்படுகிறது.

நடை திறந்திருக்கும் நேரம் : காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரையில் மாலை 4.30 மணி முதல் 8.30 மணி வரைக்கும் நடை திறந்திருக்கும்.

பூஜை முறைகள் : தினசரி மூன்று கால பூஜை நடைபெறுகிறது. காலை 8.30 மணிக்கும், நண்பகல் 12.00 மணிக்கும் இரவு 8.00 மணிக்கும் பூஜைகள் நடைபெறுகிறது.

அன்னதானம் : தினசரி 50 நபர்களுக்கு பகல் 12.30 மணியளவில் அன்னதானம் வழங்கப்படுகிறது.



உற்சவர்



மிகப் பழமையான
மூலவர் சுப்பிரமணியர்



மூலவர் விமானம்

அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோயில் இரயிலடி நாகல்நகர், திண்டுக்கல்.

அமைவிடம் : இத்திருக்கோயில், திண்டுக்கல் நகரில் கீழ்த்திசையில் புகைவண்டி நிலையத்தை ஒட்டி அமைந்துள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு சித்திவிநாயகர்

தலசிறப்பு : இத்திருக்கோயிலின் மூலவர் வரப்பிரசாதி என்று பக்தர்களால் போற்றி வழிபடப்படுகிறார். திருக்கோயிலின் திருஉருவச்சிலை சரக்கு ரயில் மூலம் மூட்டையாக கட்டப்பட்டு வந்து இறக்கப்பட்டு கேட்பாரில்லாமல் இருந்ததாகவும், அதைக் கண்ட ரயில்வே ஊழியர்களும் ஆன்மீக அன்பர்களும், புகைவண்டி நிலையத்தை ஒட்டி இருந்த அரச மரத்தடியில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்ததாகவும் செவிவழிச் செய்திகள் உண்டு. 1970 ஆம் ஆண்டு இத்திருக்கோயில் வளர்ச்சி அடையத் தொடங்கியது. ரயில்வேக்குச் சொந்தமான இடத்தில் புகைவண்டி நிலையத்தை ஒட்டி திருக்கோயில் அமைந்திருப்பதால் ரயிலடி ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் என்று பிரசித்தமாக தொடங்கியது. இத்திருக்கோயிலின் மூலவர் சித்தி விநாயகர் கீழ்த்திசை நோக்கி அமர்ந்து அருள்பாலிக்கிறார். காவல்தெய்வம் காலபைரவர் மேற்கு நோக்கி எழுந்தருளி உள்ளார்.



நடைதிறக்கும் நேரம் : தினசரி காலை 6.00 மணிமுதல் 12.00 மணிவரையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணிவரையிலும், நடைதிறந்திருக்கும்.

பூஜை முறைகள் : இத்திருக்கோயிலில் காலை முதல் மாலை வரை தினசரி பூஜைகள் நடத்தப் பெற்று வருகிறது.

தங்குமிட வசதிகள் : கோயிலுக்கு அருகில் தனியார் தங்கும் விடுதிகள் உள்ளது.

அருள்மிகு காமன் & வடக்கு காளியம்மன் திருக்கோயில்
திண்டுக்கல்

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் நகரில், திண்டுக்கல் – பழனி நெடுஞ்சாலையிலிருந்து கோவிந்தாபுரம் செல்லும் பாதையில் அமைந்துள்ளது.

இறைவன், இறைவி பெயர்
அருள்மிகு காமன் & வடக்கு காளியம்மன்

இத்திருக்கோயிலில் நுழைவு வாயிலுக்கு அடுத்து அரசமரமும், வேப்பமரமும் ஒன்றாக இருக்கும் மரத்தடியில் விநாயகர் வடக்கு முகமாக கம்பீரமாக அமைந்திருப்பது மிகச்சிறப்பு வாய்ந்ததாகும். பொதுவாக விநாயகர் அரச மரத்தடியில் கிழக்கு நோக்கி பிரதிஷ்டை செய்வது வழக்கமாகும். இத்திருக்கோயிலில் விநாயகர் அரசமரம் வேப்பமரத்தடியில் வடக்கு நோக்கி அமர்ந்து அருள்பாலித்து வருவது இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த விநாயகரை தினசரி அதிகாலை சுற்றி வந்து வழிபடுதல் சகல நன்மைகளும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

இத்திருக்கோயில் மூலவர் சன்னதி வடக்கு நோக்கி அமர்ந்து கேட்டவர்க்கு கேட்டவரத்தினை அளித்து அருள்பாலித்து வருகின்ற தாயாக அம்பிகை அருள்மிகு வடக்குக்காளியம்மன் வீற்றிருக்கிறார். இத்திருக்கோயிலுக்கு இரண்டுகால பூஜையும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், மாதாந்திர பௌர்ணமிகளிலும் விளக்கு வழிபாடும் நவராத்திரி (புரட்டாசியில்) உற்சவமும், தனூர் மாதத்தில் (மார்கழி) அதிகாலை விளக்கு வழிபாடும், வைகாசி மாதத்தில் இந்த அம்மனுக்கு உற்சவத் திருவிழா ஐந்து நாட்கள் நடைபெற்று வருகிறது. மேலும், இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் காமன் தெய்வம் வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார். இக்கோயிலில் காமனுக்கு வழிபாடு நடத்தப்படுவது இத்திருக்கோயிலுக்கு தனிச்சிறப்பினைத் தருகிறது.

திருக்கோயில்கள் வழிகாட்டி - திண்டுக்கல் மாவட்டம்

காமனுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதத்தில் வளர்பிறையில் 3 நாட்கள் திருவிழா நடத்தப்படுகின்றது. இத்திருக்கோயிலுக்கு அருள்மிகு காமன் & வடக்குக் காளியம்மன் திருக்கோயில் என்று திருநாமம் பெற்று விளங்கி வருகிறது.

திண்டுக்கல் நகர அய்யப்ப பக்தர்களால் இத்திருக்கோயிலில் ஐயப்பனுக்கான தனிச்சன்னதி ஒன்று கட்டி அதில் ஐயப்ப பக்தர்களால் ஐம்பொன் உலோக விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு சபரிமலை செல்ல முடியாத ஐயப்ப பக்தர், இத்திருக்கோயிலில் ஐயப்பனைத் தரிசனம் செய்து பெரும்பேறு பெற்று வருகிறார்கள். திண்டுக்கல் நகரில் ஸ்ரீ ஐயப்பன் உலோகத் திருமேனி உள்ள ஒரே திருக்கோயிலான இத்திருக்கோயிலில் ஸ்ரீ ஐயப்பன் சன்னதி பிரசித்தி பெற்று விளங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். தினசரி இரண்டு கால பூஜை ஐயப்பனுக்கு நடைபெற்று வருகிறது. தமிழ்மாதப் பிறப்பு நாட்களிலும் ஒவ்வொரு தமிழ்மாத ஸ்ரீ ஐயப்பன் ஜென்ம நட்சத்திரமான உத்திர நட்சத்திரத்தன்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகிறது.

தனம், கல்வி ஆகியவற்றைக் கொடுக்கும் அருள்மிகு காமன் & வடக்குக் காளியம்மனை வழிபட்டு வாழ்வில் பல வெற்றிகளைப் பெறுவோம்.

அருள்மிகு காளியம்மன் திருக்கோயில்
பென்சனர்தெரு, திண்டுக்கல் நகர்.

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் பென்சனர் தெருவில் அமைந்துள்ளது.

இறைவி பெயர்
அருள்மிகு காளியம்மன்

தலச்சிறப்பு : கோயிலின் தெய்வமாக ஸ்ரீ காளியம்மன் அமைந்துள்ளார். கருப்பணசுவாமியும் மதுரைவீரன் சுவாமியும் காவல் தெய்வங்களாக அன்னைக்கு இருமங்கிலும் ஓவியமாக காட்சி அளிக்கின்றனர். அருள்மிகு காளியம்மனுக்கு இடதுபுறம் அருள்மிகு பேச்சியம்மன் சன்னதி அமைந்துள்ளது. வலதுபுறம் நவக்கிரகங்கள் சன்னதி மற்றும் முருகனுக்குத் தனிச்சன்னதி உண்டு. அருள்மிகு விநாயகருக்கு அழகிய பீடம் தலத்தின் வலிமையைப் பெருக்கி வருகிறது.

நடைதிறக்கும் நேரம் : இத்திருக்கோயிலில் தினசரி காலை 6.30 மணிமுதல் 11.00 மணி வரையும் மாலை 5.30 மணிமுதல், 9.00 மணி வரையும், நடை திறக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது.

முக்கியத்திருவிழாக்கள் : இத்திருக்கோயில் சித்திரை மாதத்தில் சித்ரா பௌர்ணமிக்கு சிறப்பு பூஜை செய்யப்படுகிறது. வைகாசி மாதத்தில் பெருந்திருவிழா 15 நாட்கள் நடத்தப்படுகிறது. ஆடி மாதத்தில் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் ஆடி வெள்ளி சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகிறது. புரட்டாசி மாதத்தில் விநாயகர் சதுர்த்தியன்று விநாயகருக்கு சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது. நவராத்திரியின் போது அம்மனுக்கு 10 தினங்களுக்கு 10 வகையான அலங்காரம் செய்யப்படுகிறது. ஐப்பசி மாதத்தில் கௌரி விரதநாளில் சுமங்கலிகள் மஞ்சள் கயிறு கட்டி வழிபடுவர். மார்கழி மாதத்தில் முப்பது தினங்களும் காலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை சிறப்பு பூஜை நடைபெறும். தைப்பொங்கல் சிறப்பு பூஜையும், தைப்பூசத்தில் முருகனுக்கு சிறப்பு பூஜை வழிபாடும் நடைபெறுகிறது.



அருள்மிகு வண்டிக்கருப்பணசாமி திருக்கோயில்,
தங்கம்மாபட்டி, வேடசந்தூர் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் – திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் திண்டுக்கல்லில் இருந்து கிழக்கே சுமார் 30 கி.மீ. தொலைவில் தங்கம்மாபட்டி என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

இறைவன் பெயர்
அருள்மிகு வண்டிக்கருப்பணசுவாமி

தலச்சிறப்பு : இத்திருக்கோயில் நாயக்கர் சமூகம் மற்றும் ஊர் பொதுமக்களால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்டது என செவிவழிச்செய்தி கூறுகிறது. இத்திருக்கோயில் தெய்வம் வண்டி வாகனங்களை ஆபத்துகளிலிருந்து காத்து வருவதால் அருள்மிகு வண்டிக்கருப்பணசுவாமி திருக்கோயில் என பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல்லிருந்து திருச்சி மற்றும் சென்னை செல்லும் வாகனங்கள் எந்தவித ஆபத்தும் இன்றி தங்கள் ஊர் போய்ச் சேருவதற்கு இத்திருக்கோயில் முன்பாக தங்கள் வண்டி வாகனங்களை நிறுத்தி கருப்பணசுவாமிக்கு தேங்காய், பழம், சூடம் வைத்து கும்பிட்டுவிட்டுப் பிறகு தங்கள் வண்டியை ஓட்டிச் செல்வதைத் தினந்தோறும் இத்திருக்கோயில் முன்பாகக் காணமுடிகிறது. வண்டியில் இருந்து இறங்க முடியாத பக்தர்கள் காணிக்கையாக காசுகளை இரைத்துச் செல்வதையும் காண முடிகிறது.



அருள்மிகு சௌந்திரராஜப்பெருமாள் திருக்கோயில்,
வடமதுரை, வேடசந்தூர் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : இத்திருக்கோயில் திண்டுக்கல் நகருக்கு வடகிழக்கே சுமார் 20 கி.மீ தொலைவில் திண்டுக்கல் திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள வடமதுரையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

இறைவன், இறைவி பெயர்
அருள்மிகு ஸ்ரீ தேவி அருள்மிகு பூமாதேவி சமேத அருள்மிகு சௌந்திரராஜப்பெருமாள்.

தலபுராணம் : பாரதப்போர் முடிவுற்ற பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் அர்ச்சுனர்; இவ்விடத்திற்கு வருகை புரிந்தபோது ஸ்ரீ கிருஷ்ணருக்கு தண்ணீர் தாகம் எடுத்ததாகவும், அப்போது மாடுமேய்க்கும் இடையன் ஒருவன் அவர்களிடம், அருகே தண்ணீர் கிடையாது என்றும், அதற்குப் பதிலாக மண்கலையத்தில் பால்கறந்து தாகத்தைத் தணித்த காரணத்தால், ஸ்ரீ கிருஷ்ண பகவான் அச்சிறுவனிடம் உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டதாகவும், அதற்கு அந்தச் சிறுவன் வற்றாத கேணி ஒன்றைக் கேட்டதாகவும் ஸ்ரீ கிருஷ்ணர் அதை ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் செவி வழிச்செய்தியாகக் கூறப்படுகிறது.

இதற்கு ஆதாரமாக இத்திருக்கோயிலுக்கு அருகே 1.கி.மீ தொலைவில் திருக்கோயில் இடத்தில் உள்ள கிணற்றில் உள்ள தண்ணீர் பாலின் சுவையுடையதாக உள்ளது.

தலவரலாறு : இத்திருக்கோயில் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டது. அதற்குப் பிறகு விஜயநகரப் பேரரசர்கள் வல்லக்கொண்டமநாயக்கர்ள ன்றஅ ரசா்ம கன்ரு த்ரப்பநாயக்கர் என்பவரால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது கல்வெட்டு ஒன்றின் மூலம் அறியமுடிகிறது.

தலச்சிறப்பு : திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இல்லாதவர்கள் இத்தலத்து இறைவனை வழிபட்டுத் தடைகள் நீங்கப்பெறுகின்றனர். ஒவ்வொரு மாதமும் திருவோண நட்சத்திர தினத்தன்று நடைபெறும் பூஜையில் கலந்து கொள்பவர்கள் அவர்களுடைய தொழில் மற்றும் குடும்பத்தில் உள்ள சிக்கல்கள் நீங்கி நற்பலன் அடைகின்றனர்.

முக்கியத் திருவிழாக்கள் : சித்ரா பௌர்ணமி அன்று குதிரை வாகனத்தில் வீதி உலா வந்து 5கி.மீ தொலைவில் உள்ள குடகனாறு சென்று ஆற்றில் இறங்கி பக்தர்களுக்குக் காட்சி அளிக்கிறார். தீர்த்தவாரித் திருவிழா 2 நாட்கள் சிறப்பாக நடைபெறுகிறது. வைகாசி விசாக நட்சத்திரத்தில் வசந்த உற்சவம் 10 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. ஆனி மாதம் ரோகினி நட்சத்திரத்தன்று பிரம்ம உற்சவம் ஆரம்பித்து 13 நாட்கள் ஆனிப்பெருந்திருவிழா நடைபெறுகிறது. ஆவணி மாதம் கிருஷ்ணன் பிறப்பு அன்று உறியடித்திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. புரட்டாசி சனிக்கிழமை தோறும் விசேஷ பூஜைகள் நடைபெறுகிறது. மார்கழி மாதம் பகல் பத்து இரா பத்து உற்சவம் 21 நாட்களுக்கும் வைகுண்ட ஏகாதசித் திருவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது.

தங்குமிட வசதிகள் : கோவிலுக்கு அருகில் தனியார் தங்கும் விடுதிகள் உள்ளன.



அருள்மிகு சென்றாயப்பெருமாள் திருக்கோயில், பழைய வத்தலக்குண்டு, திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : திண்டுக்கல்லில் இருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ள வத்தலக்குண்டு சென்று அங்கிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள இக்கோயிலை அடையலாம் தேனி ரோட்டில் பழைய வத்தலக்குண்டு பிரிவில் இறங்கி அங்கிருந்து 1 கி.மீ. நடந்து இங்கு செல்லலாம்.

இறைவன் பெயர்
அருள்மிகு சென்றாயப் பெருமாள்

தலவரலாறு : ஆதி சென்றாயன் என்ற நிலசசுவானதார். நிறைய பசுக்களை வைத்திருந்தார். ஒருமுறை அவற்றில் ஒன்று கன்று ஈனாத ஒரு பசுவைக்காணாது தவித்தார். அதைத்தேடி குன்றின் மீது சென்றார். ஒரு பாலகன் அந்தப்பசுவின் மடியில் வாய் வைத்து பால் குடித்த வண்ணம் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார். அந்தப் பசுவைக் கோலால் அடித்து விரட்டி பாலகனின் முடியைப் பிடித்து 'யார் நீ' என்ற தொனியில் பார்க்க, ' உலகம் உண்ட வாயான் யாமே' எனச்சொல்லி பாலகன் மறைந்தான். இதனை பொய்யாமொழிச்சித்தர். "யாமே யுலகயாவுமுண்டு அமிழ்ந்தோமது யநிதி யீண்டிக் குன்றத்து யெமக்கேயில் லெடுத்தாராதனை செய்யாதி" என்று மொழிந்தார்.

ஆதி சென்னமன், அரசரின் துணையோடு திருவருள் துணை செய்ய கோயில் எழுப்பினார் பக்தர்கள் தம் குறையை ஓடோடிச்சென்று தீர்க்கும் தன்மையினால். இவரை சென்றாயப் பெருமாள் என்றார் சித்தர். இன்றும் இப்பெருமாளுக்கு சென்றாயப்பெருமாள் என்றே பெயர் வழங்குகிறது.

தலவிருட்சம் : உசிலை மரம்

தீர்த்தம் : கிருஷ்ண தெப்பம்

முக்கியத்திருவிழாக்கள் : ஒரு வருடம் விட்டு மறுவருடம் பங்குனி மாதத்தில். நான்காம் வெள்ளிக்கிழமை இரவில் அருள்மிகு சென்றாயப் பெருமாள். மலையிலிருந்து கீழே செல்வார், சனிக்கிழமை ருக்மணி சத்தியபாமா பிராட்டியாருடன் திருமண வைபோகமாம் கல்யாண உற்சவம் நடக்கும் அப்போது பெண்கள் "நலுங்குப்பாட்டுப் பாடுவர். விழாவின் கடைசி நாள் மட்டும் பக்தைகள் வெண்புடவை அணிந்து மஞ்சள் நீரை சுவாமி மீது தெளித்து விளையாடுவர் அன்று கோபிகைப் பெண்டிர் கிருஷ்ண பரமாத்மாவுடன் விளையாடிய பாவனையுடன் இத்திருவிழா நடைபெறுவதை பாம்பாட்டிச் சித்தர் பெரும் உவகையுடன் கூறுகிறார். தேவலோகத்துப் பெண்டிரெல்லாம் கொண்டாடிய நோன்பை இக்கலியுகத்தில் பெண்கள் கொண்டாடுவது மனதிற்குத்தெம்பை தருகிறது. இந்த திருமஞ்சள் நீராட்டு வைபோகத்தில் கலந்து கொள்ளும் பெண்கள் தீர்க்க சுமங்கலிகளாக பட்டுப் பீதாம்பர ஆபரணங்களாய், மாடு, கன்று, நெய், பால், தயிர் போன்ற பண்டங்களுக்கு என்றும் குறைவு வராது. சொகுசாய வாழ்வர்" என்ன குறை அவர் தமக்கே! என வினவுகிறார் அகத்தியர்.

தலச்சிறப்பு : இவ்விறைவனைத் தரிசிப்பதால் உண்டாகும் பலன், கிருஷ்ண தெப்பத்தில் நீராடி, உசிலை மரத்தைப்பூசித்து, அருள்மிகு சென்றாயப்பெருமாளைத் தொழுபவர்க்கு மலையளவு செல்வம் சேரும் நவக்கிரகங்கள் கொடுமையான பலன்களைத் தராது. அதாவது தீய ஜாதகப் பலன் பொய்த்துப்போய் நன்மையான நற்பலன்களே வாழ்க்கையில் நடந்தேறும். நாம் அனைவரும் வாழ்நாளில் ஒருமுறையேனும் இவ்விறைவனைத் தரிசித்துப் பயன்பெறுவோமாக.

கோயில் தொலைபேசி எண் : 098658 26387



அருள்மிகு மகாலிங்கேஸ்வரர் திருக்கோவில்
விராலிபட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

அமைவிடம் : திண்டுக்கல்லில் இருந்து 11 கி.மீ. தொலைவில் நத்தம் ரோட்டில் அமைந்துள்ளது. பஸ் நிறுத்தத்தில் இருந்து வலதுபுறம் 1கிலோ மீட்டார் தொலைவு நடந்து சென்றால் இத்திருக்கோவிலை அடையலாம்.

இறைவன், இறைவி பெயர்
அருள்மிகு மகாலிங்கேஸ்வரர்
அருள்மிகு மரகதவள்ளி, மாணிக்கவள்ளி

தலவரலாறு : ஆயிரம் ஆண்டுகள் முதல் 2000 ஆண்டுகள் வரை பழமையானது. மதுரை மீனாட்சி அம்மனை நிர்வகித்த ஐந்து முனிவர்களில் ஒருவரான பரத்வாஜ முனிவர் மேடை அமைத்து தம்மனதை ஒடுக்கி தவமிருந்ததால் 'ஒடுக்கம் தவசிமேடை' எனத் இத்திருக்கோயில் தல வரலாறு கூறுகிறது.

மேலும், இத்திருக்கோயில் இரண்டு பீடங்கள் அமைக்ககப்பட்டுள்ளன. சிவனத்தை தரிசிக்க வரும் பக்தர்களின் பாதம் தம்மீது படவேண்டும் என்பதற்காக, பரத்வாஜ்ரே இநநிலையில் இருப்பதாக வரலாறு.

சீதையை மீட்டு அயோத்தி செல்லும் வழியில் இங்கு வந்த இராமர், பரத்வாஜர் இலையிட்டு உணவளித்த நிலையில் அனுமன் தனக்குச் செய்த நன்றியின் பயனாக, நிலையில் அனுமன் தனக்குச் செய்த நன்றியின் பயனாக, இலையில் நடுவில் கோடிட்டு, உண்ணச் செய்தாராம். இராமர் இலையின் நடுவே இட்ட கோடுதான் வாழையிலையின் நடுவில் கோடாக இருப்பதாக செவிவழிச் செய்தியும் உண்டு. சிவன் திருக்கோயில்களில் ஒரு அம்பிகை மட்டுமே இருப்பது வழக்கு. ஆனால் மரகதவள்ளி, மாணிக்கவள்ளி என அம்பிகைகள் இருப்பது 'ஒடுக்கம்' தவசிமேடைக் கோயிலின் தனிச்சிறப்பாகும்.

இக்கோயிலில் ஈசனுக்கு நேரெதிரே 'பைரவர்' இருப்பது சிறப்பாகும். இவர் ஆதிபைரவர் என அழைக்கப்படுகிறார்.

தலச்சிறப்பு : சிவராத்திரியை ஒட்டி, சூரிய ஒளி 30 நாட்களும் காலையில் சிவன் மீதும், மாலையில் ஆதிபைரவர் மீது விழுவது தனிச்சிறப்பாகும்.

திருவிழா : இத்திருக்கோயிலில் மாசி மகத் திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவது விசேசமாகும். பரத்வாஜர் மக நட்சத்திரத்தில் பிறந்ததால் மக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பூசிக்கும் தலமாக இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

அடியவர்கள் தம் நோய் தீர இந்நாளில் நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தல் சிறப்பாகும். வீடுகளில் வாஸ்து குறைபாடு உள்ளவர்கள் இங்கு வந்து வழிபாடு செய்து குறை நீங்கப் பெறுகிறார்கள்.

கிழக்கு முகமாக அமர்ந்து அருள்பாலிக்கும் ஈசனின் அருகில் இரு அம்பிகைகளும் அமர்ந்து அருள்பாலிக்கிறார்கள். இச்சா சக்தி, கிரியா சக்தி என்ற இரு சக்திகளாக விளங்கும் அம்பிகைகள் இருவரும் ஞான சக்தியாக விளங்கும் ஈசனை அடையும் மார்க்கமாவார்.

நடை திறக்கும் நேரம் : காலை 6 மணி முதல் இரவு 6 மணி வரை திறந்திருக்கும்.

சப்தமாதர்கள்		
பெயர்	முகங்கள் / கைகள்	நிறம், வாகனம் பிற விபரங்கள்
பிராஹ்மி	நான்கு / 6	மஞ்சள் / அன்னம் (மான்தோல் மேலாடை)
வைஷ்ணவி	ஒன்று / 6	நீலம் / கருடன் (துளசி மாலை)
மஹேஸ்வரி	ஐந்து / 10	வெள்ளை / ரிஷபம் (மான், மழு அபயம், வாதம்)
கௌமாரி	ஆறு / 12	வெண் / சிகப்பு மயில் (ஸ்சூலம், வேல், அபயம், வாதம்)
வராஹி	ஒன்று / 4	கருப்பு / எருமை (பருத்த வயிறு கடா, பன்றி முகம் சங்கு,சக்கரம், அபயம், வாதம்)
மஹேந்திரி	ஒன்று / 4	நீலம் / வெள்ளை யானை (வஜ்ஜிராயுதம் வேல்)
சாமுண்டீ	ஒன்று / 10	கருப்பு / பிரேதவர்கள் (மூன்று கண்கள் பாம்பு ஆபரணங்கள் வக்ரதந்தம் ஒல்லியான உடல்)

திருக்கோயில்களில் கடைபிடிக்க வேண்டிய சில விதிமுறைகள்

1. திருநீறு பூசாமல் ஆலயத்திற்குள் செல்லக்கூடாது.
2. கோவிலில் உள்ள தெய்வங்களுக்கு முன்னால் நாம் நமது பின்புறம் காட்டி உட்காரக்கூடாது.
3. தீப ஆராதனை நடக்கும் போது குறுக்கும், நெடுக்குமாக செல்லக்கூடாது.
4. சந்நிதிக்கு நேராக நின்று கொண்டு மற்றவர்கள் தரிசனம் செய்ய இடையூறு செய்யக்கூடாது.
5. பிரகாரம் சுற்றி வரும்போது அரசியல் / வீட்டுக்கதைகளை மற்றவர்களிடம் பேசிக்கொண்டு செல்லக்கூடாது.
6. ஐந்தெழுத்து மந்திரச்சொல் "நமச்சிவாய" அல்லது "ஓம் நமச்சிவாய" என்ற திருமந்திரத்தை சொல்லிக்கொண்டு இறைவனை நினைத்துக் கொண்டு பிரகாரம் சுற்றி வர வேண்டும்.
7. சர்க்கரை பொங்கல் / புளியோதரை / வெண்பொங்கல் போன்ற பிரசாதத்தை சாப்பிட்டு விட்டு கோவிலில் உள்ள கலை வேலைப்பாடுகள் மிகுந்த தூண்களில் கைகளைத் துடைக்கக் கூடாது.
8. வாழைப்பழம், உணவு வகைகளைச் சாப்பிட்ட விட்டு, வாழைப்பழத் தோல், உணவுகளைச் சுற்றிக் கொண்டு வந்த தாள்களை கண்ட இடங்களில் போட்டு கோவிலை அசுத்தம் செய்யக்கூடாது. சுத்தம் சுகம் தரும்.

ஐந்து வகை வணக்கங்கள்

ஏகாங்கம் - தலை வணங்குதல்
திரியாங்கம் - இருகை குவித்து வணங்குதல்
பஞ்சாங்கம் - இருகை, தலை, இருகால் நிலத்தில் தோய வணங்குதல்.
ஷடாங்கம் - தலை, இரு கை மார்பு, முழந்தாள், இரண்டும் பட நிலத்தில் வணங்குதல்.
அஷ்டாங்கம் - தலை, மார்பு, இரு செவி, இருகை, பாதங்கள், நிலத்தில் பட வணங்குதல்.

ஐந்து வகை பிரதோஷக் காலங்கள்

1. நித்தியப் பிரதோஷம் : தினமும் சூரியன் மறையும் 3 1/4 நாழிகை முன்பிருந்தும் நட்சத்திரங்கள் நம் கண்களுக்குப் புலப்படும் நேரம் வரையில் உள்ளது நித்திய பிரதோஷம்.

2. பட்சப் பிரதோஷம் : வளர்பிறை சதுர்த்தி அன்று மாலை நேரம் பட்சப் பிரதோஷம் என்று கூறப்படும்.

3. மாதப் பிரதோஷம் : தேய்பிறையில் 13-ஆம் நாளில் திரயோதசி இருப்பின் அது மாதப் பிரதோஷம்.

4. மகா பிரதோஷம் : தேய்பிறையில் 13-ஆம் நாளில் திரயோதசி திதியில் சனிக்கிழமை இருப்பின் அது மகா பிரதோஷம்

5. பிரளயப் பிரதோஷம் : பிரளயம் ஏற்படும் கால கட்டத்தில் உலகின் எல்லா உயிர்களும் சிவபெருமானிடம் ஒடுங்கும். இதுவே பிரளயப் பிரதோஷம். இக்காலங்களில் சிவபெருமான் ஆனந்த தாண்டவம் ஆடி அருள்புரிவார்.